நன்றி - நூலகத்திட்டம்

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 31 | 1-15, ஒக்ரோபர், 1993. | விலை 7/=

# மட்டக்களப்பில் பட்டாளத்தினரின் நிரந்தரத் தளங்கள்?

## கச்சேரி, மாநகரசபைக் கட்டிடங்கள் பட்டாளத்தினர் வசம்

(மட்டக்களப்பிலிருந்து... சத்தியேந்திரா)

மட்டக்களப்பு, கச்சேரி, மாநகர சபை என்பன அரச பட்டாளத்தினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதாகவும், இவை விரைவில் நிரந்தர முகாம்களாக மாற்றப்பட உள்ளதாகவும் மிக நம்பகமாகத் தெரிய வருகிறது. வடக்கு கிழக்கு இனப் பிரச்சினையைப் பயங்கரவாதப் பிரச்சினை எனக் கூறிய ஜனாதிபதி டீ.பி.விஜய துங்க மூன்றே மாதத்துள் இப் பிரச்சினையைத் தீர்த்து விடப் போவதாகக் கூறியிருப்பதன் ஒரு படியாகவே இந் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளது எனச் சந்தேகிக்கப்படுகிறது. கச்சேரி, மாநகர சபை என்பனவற்றில் வேலை செய்த நூற்றுக்கணக்கான ஊழியர்கள் இட வசதி அற்ற வேறு இடங்களில் அவர்களது பணியைத் தொடருமாறு பட்டாளத்தால் 'கட்டளை' இடப்பட்டுள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, மட்டக்களப்பு மாவட்ட மக்களின் சிவில் நடவடிக்கைகளைச் செயற்படுத்தி வந்த மிக முக்கியமான அலுவலகங்களான கச்சேரி, மாநகர சபை என்பன மட்டக்களப்பு மாவட்ட பிரிகேடியர் ரொஹான் குணவர்த்தனாவின் பணிப்பின் பேரில் அரச பட்டாளத்தினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

இதுவரை நீதிமன்ற கட்டிடத் தொகுதியில் டி.ஐ.ஜி அலுவலகம் இயங்கி வந்ததன் காரணமாக நீதிமன்ற அலுவல்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்ததாகவும், அதற்கு இடையூறு விளைவிக்காமல் இருப்பதற்காகவே கச்சேரியைப் பட்டாளம் பொறுப்பேற்றுள்ளதாகவும் பட்டாளத்தினர் தெரிவித்துள்ளனர். மட்டக்களப்பு மக்களுக்கு எந்த நீதியையும் வழங்க முடியாத நீதிமன்றத்தின் அலுவல்கள் பாதிக்கப்படுவதையிட்டு பட்டாளத்தை விட்டால் அக்கறைப்பட வேறுயார் இருக்கிறார்கள்?

உண்மையில் மட்டக்களப்பு மக்களுக்கு ஏதாவது நன்மை செய்ததென்றால் அது கச்சேரியே; நீதிமன்றமல்ல. மட்டக்களப்புக்கு நன்மை செய்வது என்ற பெயரில் கச்சேரியைப் பறிக்கத் திட்டமிட்டுள்ள அரசின் நிலைப்பாடானது மட்டக்களப்பு மக்களின் நலன்களுக்கு முற்றிலும் விரோதமானதாகும். பட்டாளத்தையும் அதன் பாதுகாப்பையும் சௌகரியத்தையும் கருத்திற்கொண்டு இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கச்சேரி இயங்கி வந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போத்துக்கேயர் காலக் கோட்டையில் பட்டாளத்தினரின் முகாம் அமைவதனால் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு பாரிய பாதிப்புகள் ஏற்பட இடமுண்டு

குறிப்பாக மட்டக்களப்பு வாவியின் மேற்குப் புறம் முகாமின் பாதுகாப்பு என்ற பெயரில் முற்று முழுதாக மீன்பிடிக்குத் தடை செய்யப்படும். இதனால் இதை நம்பியுள்ள ஆயிரக்கணக்கான மீனவர்கள் பட்டினியால் வாடும் நிலை ஏற்படும். இரண்டாவதாக கோட்டையும் அதனோடு சேர்ந்த மாநகர சபையும் அருகிலேயே இருப்பதனால் இதனைச் சுற்றிப் பட்டாளத்தினர் அமைக்கும் பாதுகாப்பு வலயம் நகரின் கணிசமான பகுதியை தன்னுள் அடக்குவது மட்டுமல்லாமல் இதுவரை மட்டக்களப்பில் நிரந்தர படைத்தளம் இல்லாதிருந்த குறையைக் கூட இந் நடவடிக்கை நிவர்த்திக்கும் (இக் கோட்டை, நிலம், நீர், ஆகாயம் ஆகிய முவ்வழிகளாலும் வெளியுடன் தொடர்பைக் கொண்டிருக்கக் கூடியதும் பாதுகாப்பு வாய்ப்புக் கொண்டதுமாகும்). மூன்றாவதாக கோட்டை ஒரு ஒதுக்குப் புறமாக இருப்பதாலும் சுற்றி வர அகழிகள் இருப்பதாலும் எதிர் வரும் காலங்களில் கைதாகும் மக்களின் நிலை எப்படி அமையும் என்று நினைத்துக் கூடப் பார்க்க முடியாதுள்ளது.

எந்த நோக்கத்துக்காக போத்துக்கேயர் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த இக் கோட்டையைப் பயன்படுத்தினார்களோ அதே (மட்டக்களப்பை ஆக்கிரமிக்கும்) நோக்கத்துக்காகவே இப்பொழுது பட்டாளத்தினர் இதை பயன்படுத்தப்போகிறார்கள்.

புதிது புதிதாக படைத்தளங்களை அமைப்பதுதான் புதிய விஜய துங்க பாணி சிவில் நிர்வாகம் போலும்.

### பேய் ஆட்சி செய்தால்....

மட்டக்களப்பு மாவட்டத்தை விட்டு வெளியேறக் கூடாது என்று நான்கு அரச திணைக்களத் தலைவர்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட பிரிகேடியர் ரொஹான் குணவர்த்தனா உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று தெரிய வருகிறது! அண்மையில் இவரால் கூட்டப்பட்ட கூட்டம் ஒன்றுக்கு சமூகம் அளிக்கவில்லை என்பதற்காக பொறியியலாளர் ஒருவர் கைது செய்யப்பட்டு எச்சரிக்கப்பட்ட பின் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பில் உயர் அரச பதவி வகிக்கும் இவர்களுக்கே இந்த நிலை என்றால் அங்குள்ள அப்பாவி மக்களின் நிலை எப்படி இருக்கும் என்பது வெளிப்படை.

அரசு மூச்சு விடாமல் அறிவிக்கும் மட்டக்களப்பின் சுமூக நிலையில் இலட்சணம் இப்படி இருக்கிறது!

பேய் ஆட்சி செய்தால் பிணம் தின்னும் சத்திரங்கள்.

மட்டக்களப்பில் சிவில் நிர்வாகம்...
பக்கம் 6,7

### பட்டாளத்தினரின் பயிற்சிக் களமாகும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள்

புதிதாகத் திரட்டப்பட்ட பத்தாயிரம் பட்டாளத்தினருக்குப் பயிற்சியளிப்பதற்காக பலம்பிட்டிய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும், பேராதனை ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஒருபகுதியும் பட்டாளத்தினரால் கையேற்றப்பட்டுள்ளது.

பலப்பிட்டிய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை தங்குவிடுதி உட்பட முழுமையாக பட்டாளத்தினரால் கையேற்றப்பட்டுள்ளது. அங்கு கல்வி கற்று வந்த முதலாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிகள் யாவும் இடை நிறுத்தப்பட்டு மீளவும் அவர்களது பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இவ்வருட இறுதியில் தாம் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாகவும்,எனவே தமக்கான வகுப்புக்களை நடாத்த அனுமதி தருமாறும் இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள் விடுத்த கோரிக்கைகளுக்கு,கலாசாலைக்கு வெளியே ஓரிடத்தில் வகுப்புக்களை நடாத்துங்கள் எனப் பட்டாளத்தினர் பதிலளித்துள்ளனர்.

பேராதனை ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கையேற்றப்பட்டதற்கு அங்கு கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்கள் அனைவரும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஒருபுறத்தில் மாணவர்களிடத்தில் ஆங்கில மொழியறிவு வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், க.பொ.த. உயர்தரத்தில் ஆங்கில மொழியை ஒரு பாடமாக்க வேண்டும் எனவும் அரசின் அமைச்சர்கள் பேசிவரும் அதே நேரத்தில், நாட்டில் இருக்கிற ஒரேயொரு ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும் மூடிவிடுவதும்,பாடசாலை மாணவர்களை படையில் சேருமாறு கோருவதும் அரசின் உண்மையான அக்கறை எதுவென்பதை புலப்படுத்துகிறதல்லவா?

### யூரியா விசிறவும் அனுமதி பெற வேண்டும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வயல் விதைப்பவர்கள் முன்கூட்டியே பட்டாளத்தினரிடம் அனுமதி பெற வேண்டும் என்பதும், அவ்வாறு அனுமதி பெற்றால் தான் விதை நெல்லையும், யூரியா போன்ற உர வகைகளையும் எடுத்துச் செல்ல பட்டாளத்தினர் அனுமதிப்பார்கள் என்பது ஏற்கனவே தெரிந்த செய்தி.

இப்போது யூரியா விசிறப்பட வேண்டிய நாளையும் பட்டாளத்தினர் முன்கூட்டியே அறிவிப்பார்களாம். குறித்த தினத்தில் பட்டாளத்தினர் முன்நிலையிலேயே யூரியா விசிறப்பட வேண்டும் எனவும் படையினர் கட்டளையிட்டுள்ளார்களாம்.

விதைக்கவும் பட்டாளத்தினரிடம் அனுமதி பெறவேண்டும், விதைத்ததை அறுக்கவும் பட்டாளத்தினரிடம் அனுமதி பெற வேண்டும், யூரியா விசிறவும் பட்டாளத்தினரிடம் அனுமதி, பெற வேண்டும். மொத்தத்தில் பட்டாள ஆட்சி தானோ?

நன்றி - நூலகத்திட்டம்



# எல்லைத் தமிழினி

## அமைச்சருக்குப் புரியுமோ?

தமிழ்ப்பிரதிநிதிகள் உட்பட தமிழர்கள் அனைவரும் தமிழில் செயற்பட முன்வந்தால் தமிழ் உரிமை தானாகவே கிடைத்து விடும்' என்று பாராளுமன்றத்தில் அறிவித்திருக்கின்றார் திருமதி ராஜமனோகரி புலேந்திரன்.

'ஜனாதிபதியின் அரசியல் சாணக்கியத்தை' மிகச் சிறப்பாக - எதிர்கட்சிகளை விட மிகச் சிறப்பாக- புரிந்து வைத்திருக்கும் கல்வி இராஜாங்க அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன் அவர்களின் இந்தக் கூற்றை எப்படி விளங்கிக் கொள்வது என்று புரியவில்லை.

கல்வி இராஜாங்க அமைச்சர் அவர்கள் தமிழர்களை தமிழில் செயற்படுமாறு கேட்கிறார். அவர்கள் தமிழில் அல்லாமல் 'தெலுங்கில்' செயற்பட்டுக் கொண்டு இருப்பதாக அவர் நினைக்கிறாரோ என்னவோ. கல்வி அமைச்சரினால் தமிழிலே படித்து தமிழிலே படிப்பிக்கும் ஆசிரியர்களுக்கு சம்பளப்பணத்தைப் பெறுவதற்கு பயன்படுத்தப்படும் டி ஃபோம் இன்னமும் சிங்களத்தில் தான் வழங்கப்படுகிறது என்பதும்,லிகிதர் குறிப்பிடுமிடத்தில் கையொப்பமிட வேண்டிய நிலையே தமிழ் ஆசிரியர்களுக்கு இருக்கிறது என்பதுவும், ஏன், ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் கூட சிங்களத்திலேயே வழங்கப்படுகின்றன'என்பதும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ என்னவோ ?

அமைச்சின் கல்வி அமைச்சில் தமிழ்மட்டும் தெரிந்த ஒருவர் போய் ஏதாவது செய்ய முடியுமா என்பதும் அமைச்சருக்கு தெரியுமோ என்னவோ...

எல்லாவற்றுக்கும் மேலாக அமைச்சரிடம் ஒரு கேள்வி. அமைச்சர் அவர்கள் தான் எல்லாவிடயங்களையும் தமிழில் தான் செய்கிறாரா? சக அமைச்சர்களுடன் அவர் தமிழில் தான் உரையாற்றுகிறாரா?'சொந்தக் காலில் நிற்பதாக' பெருமை பேசும் அமைச்சர் அவர்கள் முதலில் தாம் பேசுவது என்ன என்று விளங்கிக் கொண்டு பேசுவது நல்லது.

பாராளுமன்றத்தில் அவரது பேச்சுக்கு கைதட்ட யாராவது இருக்கக் கூடும்.

ஆனால் வெளியில் - ஏன் 'அவரது மாவட்டம்' என அவர் கூறிக் கொள்ளும் வவுனியாவில் கூட - அவரது பேச்சுக்கு கைதட்ட யாராவது இருக்கிறார்களா என்று கொஞ்சம் கீழே இறங்கி வந்து பார்க்கட்டும்.

அப்போது தெரியும் அவரது நிலை அவருக்கு!

## மூத்திரம் பெய்யும் மழலைப்பட்டாளம்

அண்மையில் வவுனியாவில் வைத்து வன்னிப்பகுதி பிரிகேடியர் அவர்கள் பாடசாலை மாணவர்கட்கு ஒரு அழைப்பு விடுத்திருக்கிறார்.

'இராணுவத்தில் வந்து சேருமாறும் அப்படி சேரும் மாணவர்களுக்கு விசேட பயிற்சிகளுக்காக வெளிநாடு செல்லும் வாய்ப்புக்கள் வழங்கப்படும் என்றும், தொடக்கத்திலேயே 2500 ரூபா சம்பளம் வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்திருந்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு கவர்ச்சியூட்டி பட்டாளத்தில் சேர்ப்பதுதான் அரசின் இன்றைய புதிய 'தேசபக்தி' நடவடிக்கை போலும்.

ஆயிரக்கணக்கில் பட்டாளத்தை விட்டு ஓடிவிட்டவர்களது இடத்தை நிரப்ப பிரிகேடியர் அவர்கள் இந்த கவர்ச்சியான அழைப்பை விடுத்துள்ளார் என்று தெரிகிறது.

தமது படைகளை கண்டதும் புலிகளின் 'மழலைப் பட்டாளத்திற்கு' உடுத்த உடுப்புடன் மூத்திரம் போய் விடும் என்று அன்று கிண்டலடித்தார் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன்.

பிரிகேடியர் அழைக்கும் மாணவர்கள் படையில் சேர்ந்தால் அவர்களும் அப்படிச் செய்ய மாட்டார்களோ?.

## தயார் நிலைத் தீர்வுத் திட்டங்கள் !

மூன்று மாதங்களுக்குள் பிரச்சினையை தீர்த்து விடலாம் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

எந்தப் பிரச்சினை என்று தெரியவில்லை.

அவரைப் பொறுத்தவரை அங்கு இருப்பது பயங்கரவாதப் பிரச்சினை மட்டும்தான்.

அதை மூன்று மாதத்தில் அவர் முடித்து விடமுடியும் என்று எப்படி இவ்வளவு நிச்சயமாக சொல்கிறார் என்று புரியவில்லை.

ஒரு வேளை வடக்கு கிழக்கை மூன்று மாதத்துள் குண்டுவீசி முற்றாக அழித்து விடலாம் என்று அவர் கணக்குப் போட்டுள்ளாரோ என்னவோ?

அல்லது முன்னைய ஜனாதிபதி அவர்கள் தொடர்பு வைத்திருந்ததாக கூறப்படும் மலையாள மாந்திரீகர்கள் யாருடனாவது புதியவர் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளாரோ என்னவோ?

அவர் 'வகுத்துச் செயற்படுத்தத் தொடங்கியிருக்கும் திட்டம்' அத்துணை சக்தி வாய்ந்த திட்டம் என்பதாலோ என்னவோ இன்றுவரை அதை யாருக்கும் ஜனாதிபதி தெரிவிக்கவில்லை.

வடக்கு கிழக்குப் பிரச்சினையை மூன்று மாதத்துள் தீர்த்து விடும் திட்டத்தை வகுக்கும் ஆற்றல் மிக்கவரான ஜனாதிபதி அவர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

அடுத்ததாக மேலும் சில பிரச்சினைகள் உலகம் முழுவதும் இருக்கின்றன.

அவற்றுக்கும் ஏதாவது திட்டத்தை வகுத்துக் கொடுத்தால் உலகம் முழுவதுமே பிரச்சினை தீர்ந்துவிட வாய்ப்புண்டு. அவற்றுக்கு ஒரு ஆறு மாத காலம் போதுமா?

சற்று அதிகமானாலும் பரவாயில்லை. பாலஸ்தீன-இஸ்ரேல் உறவால் நோர்வே புகழ் பெற்றது போல, ஸ்ரீலங்காவும் புகழ் பெற வேண்டும் என்ற ஆசையில் இப்படி கேட்கிறேன்.

வேறொன்றுமில்லை.

# மணிவாசகம்

## ஈழப் பொலிஸ் இலங்கைப் பொலிஸாகும்!

✱ மிக விரைவிலேயே பாதுகாப்புப் படையினர் தமது கட்டுப்பாட்டிலுள்ள எல்லையை விஸ்தரிப்புச் செய்வதனூடாக யாழ்ப்பாணத்திலுள்ள ''ஈழப் பொலிஸை'' இலங்கைப் பொலிஸைக் கொண்டு மாற்றீடு செய்வார்கள்.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சிசில்வைத்தியரத்ன -தி ஐலன்டில்- 13.09.93.

## பாராளுமன்றக் குழுவும் பயங்கரவாதம் என்கிறது!

✱ ஜனாதிபதி டீ.பி. விஜேதுங்கவினால் வெளியிடப்பட்ட ''இந்நாட்டில் தமிழ்ப் பிரச்சினை என்ற ஒன்றில்லை. வடகிழக்கில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே'' என்ற அறிக்கையை ஜனாதிபதி தலைமையிலான அரச பாராளுமன்றக் குழு முற்று முழுதாக அங்கீகரித்துள்ளது.

-தி ஐலன்ட்- 13.09.93

## பண்டாவின் உபதேசம்

✱ இனப்பிரச்சினையொன்றைத் தீர்க்க நாட்டின் ஒரு பகுதியை உடைத்தெடுக்க வேண்டுமா? பயங்கரவாதம் மூலம் நாட்டின் ஒரு பகுதியை உடைத்தெடுக்க முயற்சிப்பது ஏகாதிபத்தியமொன்றைக் கட்டி எழுப்பவே உதவும் இல்லையா? அதற்காக இடம் கொடுக்க முடியாதல்லவா?

ஜனாதிபதி டீ.பி. விஜேதுங்க - லங்காதீப- 13.09.93

## ஜனாதிபதிக்கு ஆதரவுத் தந்தி.

✱ பயங்கரவாதத்தை முழுமையாக அழித்தொழிப்பேன் எனவும், நாட்டைப்பிளவுபட இடமளிக்காத அதே நேரம் வட-கிழக்கை இணைக்க மாட்டேன் எனவும் தங்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களைச் சிங்கள மக்கள் மதிக்கிறார்கள். இந்தக் குறிக்கோளில் வெற்றி பெற சிங்கள மக்களின் மழு ஒத்துழைப்பும் தங்களுக்குக் கிடைக்கும்.

சிங்களப் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் காமனீ ஜயசூரிய, ஜனாதிபதி டீ.பி. விஜேதுங்கவுக்கு அனுப்பி வைத்த தந்திச் செய்தி -திவயினவில்- 14.09.93

## ஒரு ஓட்டத்திற்கு நூறு ரூபா ஒரு விக்கெட்டுக்கு ஐநூறு ரூபா ஒரு ஜொனி வெடிக்கு எவ்வளவு?

✱ இலங்கை-தென் ஆபிரிக்க டெஸ்ட் கிறிக்கெற் போட்டிகளில் பெறப்பட்ட ஒவ்வொரு ஓட்டத்திற்கும் ரூபா 100/=ப் படியும் , ஒரு விக்கெற்றுக்கு ரூபா 500/=ப் படியும் பல்தேசிய நிறுவனங்கள் மூலம் கொடுக்கப்பட்டதாக அறியப்படுகிறது. நாம் யாரும் அதனை எதிர்க்கவில்லை, ஆனால் படையினர் ஆயிரக் கணக்கில் குருடர்களாகிக், கை, கால்களை இழந்து துணையில்லா நிலைக்குத் தள்ளிய வடக்கின் புலிகளால் புதைக்கப்பட்ட ஜொனி வெடியொன்றைக் கண்டு பிடிப்பதற்காக எவ்வளவாவது கொடுக்கப் பல்தேசியக் கம்பனிகள் முன் வந்ததா?

கண்டி மாநகரசபையின் ஸ்ரீ.ல.சு.க. உறுப்பினர் அத்துல செனரத் - திவயினவில்- 14.09.93

## பயங்கரவாதத்திற்கு மத்தியில் என்ன விகடச் சிரிப்பு?

✱ ''எமது நாட்டை அழிக்கக் குறிபார்க்கும் புலி உபத்திரவங்களை அடக்க நாம் அனைவருமே ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். பல்வேறு உதாரணங்களை எடுத்துக் காட்டி, இந்தத் தொல்லைகளில் உள்ள பயங்கர நிலைமையை எடுத்துரைத்து கடந்த 12.09.93 திவயின ஞாயிற்றுக்கிழமை மஞ்சரியில் 'விபத்திற்கு மத்தியில் கேளிக்கை, களியாட்டங்களில் ஈடுபடுவதா?'' என்று பிரசுரிக்கப்பட்ட ஆசிரியர் தலையங்கம் மிகவும் காலத்திற்கு உகந்ததாகும். நான் அதனை மிகவும் விரும்பிப் படித்தேன்.''

செய்தி, தகவல் இராஜாங்க அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்ஹ - திவயினவில்- 15.09.93

**— சீ.சாத்தனார் —**

## புலிக்குப் பதில் சிங்கம்

✱ இலங்கையின் கிழக்குக் கடற்கரையில் நடமாடும் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் ''கடற் புலிகளை'' அழிப்பதற்காகக் ''கடற் சிங்கங்கள் '' என்ற பெயரில் ஆயுதப்படைப் பிரிவொன்றை உருவாக்கும் நடவடிக்கைகள் செய்யப்பட்டு வருகின்றன.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சிசில்வைத்யரத்ன-லங்காதீபவில்- 15.09.93

## கிரிக்கெட் அல்ல; யுத்தமே தேவை

அரசுக்கு எதிராகச் செயற்படுபவர்கள் பற்றியல்லாது புலிப் பயங்கரவாதிகள் பற்றித் தேடுவதற்காக விசேட உளவுச் சேவையொன்று இல்லாததால் புலிகளின் பலம் நாட்டினுள் வளர்ந்து வருகிறது. புலிகளை நிராயுதபாணிகளாக்காது பேச்சுவார்த்தை நடத்துவதென்பது கேள்விக்குரியதாகும். சர்வதேச சக்திகளது நிர்ப்பந்தம் காரணமாகச் சிலர் சமஷ்டி முறை பற்றிப் பேசுகின்றதை நாம் எதிர்க்கின்றோம். இன்று யுத்தத்திற்கு ஈடுகொடுக்கக் கூடிய மனநிலையொன்று நாட்டினுள் இல்லை. உடனடியாக விழாக்கள், களியாட்டங்களை நிறுத்துமாறு வற்புறுத்தியும், அது வரவர அதிகரிக்கிறது. யுத்தச் செலவை நிறுத்தி அந்த நிதியைப் போல இருமடங்கைக் கிறிக்கெட் ஆட்டத்திற்காக செலவு செய்வது நிந்தனைக்குரியது. எல்.ரீ.ரீ.ஈ.யின் கோரிக்கைகளுக்கு ஸ்ரீ.ல.சு.கட்சி உடன்பாடு என்ற தொண்டமானின் அறிவிப்பை வாசிக்கும் போது எமக்கு சந்தேகம் தோன்றியுள்ளது. அது பற்றி உடனடியாகத் துருவிப் பார்க்க வேண்டும்.

தேசாபிமான பிக்குகள் முன்னணியின் தலைவர் பெங்கமுவ நாலக்க தேரர் -திவயின-18.09.93

## காவல் தெய்வங்களல்ல சோற்றுத் தெய்வங்கள்

✱ சிங்கள இனத்தின் காவல் தெய்வங்களாகக் கருதப்படும் மஹா சங்கத்தினரில் நூற்றுக்கு எண்பத்தைந்து வீதத்தினரை இன்று காவல் தெய்வங்கள் என்று கருத முடிவதில்லை. சோற்றுத் தெய்வங்கள் என்றே கருத வேண்டியுள்ளது. தற்போதைய சிங்கள இனத்தவர்கள் இனத்தைப் பற்றிப் பேசுபவர்களையும், செயற்படுபவர்களையும் பைத்தியக்காரர்களாக கருதுகின்றனர். சிங்கள இனத்தின் மனநிலை இன்று மிகவும் தாழ்ந்து போயுள்ளது.

மாஹிங்கமுவ குமாரகித்தி தேரர் -லங்காதீபவில்- 21.09.93

## தலைவருக்கெல்லாம் தலைவர்

✱ ஈழத்தைக் கொடுக்க மாட்டேன் என எந்தத் தலைவரும் நேரடியாகக் கூறவில்லை. ஆனாலும் தற்போதைய ஜனாதிபதி அவர்களின் உரை பெறுமதியானது. ஜனநாயகம் என்று கூறி கேட்கும்,கேட்கப்படும் எல்லாவற்றையும் கொடுக்க நாம் தயாரில்லை. அதன்படி எதுவித பாதிப்பும் இல்லாது இரணவில ''அமெரிக்காவின் குரல் ''ஐ நிறுவ அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

வானொலி,தகவல் இராஜாங்க அமைச்சர் ஏ.ஜே.றணசிங்ஹ - திவயினவில் - 22.09.93

## ஜனாதிபதி ஒரு சிங்கள மைந்தன்

✱ ஜனாதிபதி,சிங்கள பெற்றோரின் உண்மையான மைந்தன். பயங்கரவாதத்தை நொறுக்கி இனத்தையும்,மதத்தையும் காக்கும் ஜனாதிபதியின் முயற்சிக்கு காமனி புகழாரம்.

ஜனாதிபதி டீ.பீ.விஜேதுங்காவின் அண்மைய அறிக்கை வட-கிழக்கிலுள்ள பயங்கரவாதத்திக்கு முடிவுகட்டும் அவரது விருப்பை வெளிப்படுத்தியிருந்தது. அது தூண்டுதல் தருவதாகவும் உற்சாகம் தருவதாகவும் உள்ளது.

பயங்கரவாதத்தை நொறுக்கி, இனத்தையும், மதத்தையும் காக்கும் ஜனாதிபதியின் முயற்சி நேர்மையானதே. ஏனெனில் அவர் ஒரு சிங்களத் தகப்பனதும், தாயினதும் உண்மையான மைந்தனாகும்.

ஸ்ரீலங்கா மஹாபோதி சங்கத்தின் தலைவரும்,சிங்களப் பாதுகாப்பு அமைப்பின் தலைவருமான காமனீ ஜயசூரிய - தி ஐலன்டில் - 23.09.93

## விடுபட்டது...

கடந்த இதழில் 'மணிவாசகம்' பத்தியில் வெளியான 'உத்தம பணி' என்ற செய்திக்குறிப்பில் அதனைக் கூறியவரின் பெயரும், பத்திரிகையும் விடுபட்டுள்ளது.

'இரத்தினபுரி மாவட்ட ஸ்ரீ.ல.சு. கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான டபிள்யூ.ஜே. செனவிரத்ன,லங்காதீபவில் 02.09.93 எனச் சேர்த்து வாசிக்கவும்.

நன்றி - நூலகத்திட்டம்



சரிநிகர்
18/2, அலோசாலை
கொழும்பு - 03
தொலைபேசி :576704

பிரதம ஆசிரியர் சேரன்

## காதல் விளையாடி...

வடக்கு கிழக்கில் இனப்பிரச்சினையே இல்லை; அங்கு இருப்பது வெறும் பயங்கரவாதப் பிரச்சினையே என்ற ஜனாதிபதியின் புகழ் பெற்ற அறிவிப்பின் பின் பாராளுமன்றத்தில் பலத்த விவாதங்கள் சூடாக நடைபெற்றுள்ளன.

'இந்த நாட்டைப் பிரிக்க விட மாட்டோம். நாட்டிலிருந்து ஒரு சிறுதுண்டைப் பிரிப்பதானாலும் அது கடைசிச் சிங்களவரின் மரணத்தின் பின்னரே சாத்தியம்' என்று உணர்ச்சியுடன் ஐ.தே.க எம்.பி ஹட்சன் சமரசிங்க பேசிய போது பெரியளவில் ஆரவாரித்துக் கைதட்டினார்கள் சுதந்திரக்கட்சி எம்பிக்கள் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

அண்மையில் கம்பஹா பண்டாரநாயக்க மகாவித்தியாலயத்தில், மறைந்த பண்டாரநாயக்கா அவர்களது 75வது பிறந்த தினத்தையொட்டி நடைபெற்ற கண்காட்சி ஒன்றை திறந்து வைத்துப் பேசிய ஸ்ரீ.ல.சு.க தலைவி சிறிமா பண்டாரநாயக்காவும் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

'வடக்கு கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசுக்கு அக்கறை ஏதும் கிடையாது. அது உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். அது உடனடியாகத் தீர்க்கப்படாது விட்டால் விரைவிலேயே சிங்கள இனம் இந்த நாட்டில் சிறுபான்மை இனமாகிவிடும்..... நாம் ஈழம் வாதிகட்கு ஒரு அங்குல நிலத்தைக் கூட விட்டுக்கொடுக்க மாட்டோம்'

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கைதுசெய்யப்படும் வரை இனப்பிரச்சினை தீர்க்கப்படுவது சாத்தியம் இல்லை என்றும் அதே கூட்டத்தில் அம்மையார் அவர்கள் பேசியிருந்தார்கள்.

இனப்பிரச்சினை என்பது சிங்கள இனத்திடமிருந்து நிலத்தைப் பிடுங்கிக் கொள்கிற ஒரு பிரச்சினையாகத்தான் சுதந்திரக்கட்சி தனது மக்களுக்கு காட்டிக் கொள்ள விரும்புகிறது போலும். வடக்கு கிழக்கில் இருப்பவர்களை பயங்கரவாதிகள் என்று ஜனாதிபதி முத்திரை குத்தினார் என்றால், சிங்களவரிடம் நிலத்தைப் பிடுங்குவதுதான் அவர்களது நோக்கம் என்று முத்திரை குத்துகிறது சுதந்திரக் கட்சி.

வடக்கு கிழக்குப் பிரச்சினையும், பிரபாகரனின் போராட்டமும் அத்தனகலையில் காணிபிடுங்கவோ அல்லது அம்மையாரின் ரொஸ்மீட் பிளேஸ் இல்லத்தினை அபகரிக்கவோ எடுக்கிற ஒரு விவகாரமாகத்தான் அம்மையாருக்கு தோன்றுகிறது போலும்.

'வடக்கு கிழக்கு பிரச்சினையை தீர்க்காவிட்டால் சிங்கள இனம் சிறுபான்மை இனமாகி விடும்' என்று அவர் மிரட்டுவது எதை வைத்து?

வடக்கு கிழக்கு யுத்தத்தால் தான் தமிழ் பேசும் மக்களின் சனத்தொகை அதிகரித்து விடும் என்கிறாரா?

**அல்லது** சிங்கள மக்கள் கொல்லப்பட்டு விடுவார்கள் என்று தெரிவிக்கின்றாரா?

வடக்கு கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பது சிங்கள மக்கள் சிறுபான்மையினர் ஆகிவிடக்கூடாது' என்பதற்காகவென்று நினைத்து தீர்க்க முயன்றால் அந்த முயற்சியின் தர்க்க ரீதியான முடிவு வெறும் பிரபாகரனை கைது செய்வதுடன் முடியப் போவதில்லை. வடக்கு கிழக்கிலேயே தமிழ் பேசும் மக்களை சிறுபான்மையினராக்குவதுடன் தான் இது முற்றுப்பெற முடியும்.
வடக்கு கிழக்கு இணைப்பை உடைப்பது, வடக்கையும் கிழக்கையும் தனித்தனி மாகாணங்களாக்குவது, முடிந்தளவு குடியேற்றங்களை ஏற்படுத்தி அங்கு தமிழ் பேசும் மக்களை சிறுபான்மையினராக்குவது என்ற பழைய திட்டத்தையே தொடர்ந்து அமுல்படுத்தல் வேண்டும் என்பது தானே இதன் அர்த்தம்?

ஆக சுற்றிச் சுற்றி அம்மையாரும் அதே சுப்பரின் கொல்லைக்குள் தான் நிற்கிறார்.
யூ.என்.பியும் சரி, ஸ்ரீ.ல.சு.கவும் சரி அவை எதைச் செய்தாலும் எப்படி முரண்பட்டாலும் இனப்பிரச்சினை என்றவுடன் வருகின்ற முடிவு ஒன்றாகத்தான் இருக்கிறது.

ஸ்ரீ.ல.சு.க எம்.பி. மங்கள முனசிங்கவின் தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முடிவுகளும் இப்படித்தானே அறிவிக்கப்பட்டுள்ளது?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதானால் பிரபாகரனை கைது செய்த பின்தான் சாத்தியமென்றால், தொடர்ந்து யுத்தத்தை தீவிரமாக தொடர வேண்டும் என்பதைத் தவிர வேறென்ன அர்த்தம் இருக்க முடியும்.

'பிரபாகரன் என்ற வெறி பிடித்த தனி மனிதன் தான்' இத்தனை பிரச்சினைக்கும் காரணம் என்று ஜனாதிபதியின் 'பயங்கரவாதப் பிரச்சினை'யை 'பிரபாகரன் பிரச்சினை' என்று சொல்வதைத் தவிர வேறென்ன?

ஆக, அம்மையும் ஒன்றுதான்! அப்(பு)பரும் ஒன்றுதான்.


என்னதான் செய்தாலும் எப்படித்தான் மாறி மாறித் தோற்றங் காட்டினாலும் அவர்களது முடிவு ஒன்று தான்.

அதுதான் வடக்கு கிழக்கில் உள்ளது பயங்கரவாதப் பிரச்சினையோ, இனப்பிரச்சினையோ அல்ல.
'தமிழ் பேசும் மக்கள்' என்ற பிரச்சினை'

இதை தீர்க்க உள்ள ஒரே வழி அதை இல்லாமல் செய்வது தான்.
அந்த முடிவு முடிந்த முடிவு

எல்லா நடவடிக்கைகளின் போதும் அது அடிப்படையாக இருக்கவே தான் செய்யும்.
ஆம்
காதல் விளையாடி இரு கைவீசி வந்தாலும்
சாதிமனம் தீர்க்கட்டத்தே தான்!

# கை குலுக்கப் போவது இரண்டு தனி மனிதர்களா? அல்லது இரண்டு தேசங்களா?





பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் அவர்களும் இஸ்ரேலியப் பிரதமர் றொபினும் கைகுலுக்கிக் கொண்ட 'வரலாற்று முக்கியத்துவம்' வாய்ந்த செய்தியைப் பற்றி பேசாதவர்கள் இல்லை. சற்றும் எதிர்பார்க்க முடியாத உலக அதிசயம் ஒன்று தமது கண்முன்னே நடப்பதைப் பார்ப்பது போல உலகம் முழுவதும் இதைப் பார்த்தது. இப்படி ஒரு நிகழ்ச்சியை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இரு தரப்பாருமே கூட ஒரு சில ஆண்டுகளுக்கு முன் வரை கற்பனை கூடச் செய்து பார்த்திருக்க மாட்டார்கள். ஆனாலும் அது நடந்தது.

இதைப் பார்த்த எம்மூர் சட்டதரணி ஒருவருக்கு ஒரு ஆசை. பரம வைரிகளான இவர்களால் கைகுலுக்கிக் கொள்ள முடியும் என்றால் ஏன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் ஜனாதிபதி விஜேதுங்காவும் கைகுலுக்கிக் கொள்ள முடியாது என்று கேட்கிறார் அவர். அவரது இந்தக் கேள்வி வீரகேசரியில் முன்பக்கச் செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. முன்னாள் தமிழ் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும் இந்நாள் யூ.என். பி யாளருமான சட்டத்தரணி மோதிலால் நேரு அவர்களே இந்த 'நம்மூர்ச் சட்டத்தரணி' அவர்கள் ஆவர்.

பிரபாகரனை யசீர் அரபாத்திற்கு எப்படி ஒப்பிடலாம் என்று யாராவது விடயம் தெரிந்தவர்கள் கேட்கக் கூடும். முடியுமானளவிற்கு அனைத்து பாலஸ்தீன போராட்டக் குழுக்களையும் ஒன்றிணைத்து ஐக்கியப் படுத்திய யசீர் அரபாத்தையும், போராட்டக் குழுக்களை ஒழித்து அல்லது விரட்டியடித்த பிரபாகரனையும் ஒப்பிட முடியுமா என்று கேட்பது நியாயம்தான். ஆனால் அதை விட முக்கியமான விடயம் ஆயுதங்களைப் போட்டுவிட்டு நாட்டைப் பிரிக்காமல் சமாதானத்திற்காகப் பேச பிரபாகரன் வரவேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் பிரபாகரன் கைகுலுக்கிக் கொள்ள முடியுமா என்பது. இவர்களின் அர்த்தத்தில் சமாதானம் என்பது சரணாகதி அன்றி வேறல்ல! சட்டத்தரணி அவர்களுக்கும், த.வி.கூ. உள்ளிட்ட அரசியற் கட்சிகட்கும், பிற மாஜிப்போராட்டக் குழுக்களுக்கும் இது சாத்தியமாக இருக்கலாம்.
ஆனால் புலிகளுக்கு இது சாத்தியமாகும் வாய்ப்பு உண்டா?

77 தேர்தலில் மக்களின் ஆணையைப் பெற்றுக் கொண்ட கையோடு தமது தீர்வை உடைப்பிலே போட்டுவிட்டு மாற்றுத் தீர்வுக்காகப் பேசத் தொடங்கிய கூட்டணி உட்பட, 'மாற்றுத் தீர்வு மாற்றுத் தீர்வு' என்று கோரும் அனைத்துக் கட்சிகளும் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டிய விடயம் ஒன்று உண்டு. அதுதான் யசீர் அரபாத் அவர்களோ, பாலஸ்தீன விடுதலை இயக்கமோ இஸ்ரேலிய அரசிடம் மாற்றுத் தீர்வைக் கோரவில்லை; தாம் வைத்த தீர்வுக்காக அவர்கள் போராடினார்கள்; உயிர், உடமை அனைத்தையும் தியாகம் செய்து வீர வரலாறு படைத்தார்கள்; மாற்றுத் தீர்வு ஒன்று முன்வைக்கப்பட்ட போது அதைப் பரிசீலித்தார்கள்; அவர்கள் தமது கொள்கைக்கு விசுவாசமானவர்கள்! என்பது.

தமது கொள்கைகளை வெறும் எழுத்திலும் பேச்சிலும் பாவித்து விட்டு வைத்த தீர்வுக்காக ஒரு மயிரைக்கூட அசைக்காது மாற்றுத் தீர்வுக்காகவே காலம் பூராவும் உழைத்தார்கள் இவர்கள். பாரிய தவறுகளைக் கொண்டிருந்தாலும், தமிழ் முஸ்லீம் மக்களது அரசியல் உரிமை, பேச்சுரிமை என்பவற்றை ஆயுத முனையில் மோசமாக நசுக்கிய போதும், தாம் சொல்லும் தமது 'தாகத்திற்காக' இன்றுவரை புலிகள் மட்டுமே போராடுகிறார்கள். அவர்களது பாதை, நடைமுறை என்பவை எந்த ஒரு சராசரி ஜனநாயகவாதியாலும் ஆதரிக்கப்பட முடியாதது என்ற போதும்! அந்த வகையில் யசீர் அரபாத்திற்கும் பிரபாகரனுக்கும் ஒரு ஒற்றுமை இருக்கத்தான் செய்கிறது. ஆகவே தான் நிபந்தனை போட்டு கைகுலுக்கும் நிலையில், சட்டத்தரணி அவர்களது ஆசை நிறைவேறுமா என்ற சந்தேகம் எழுகிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும், ஜனாதிபதி விஜேதுங்காவும் கைகுலுக்கிக் கொள்வது வரலாற்றில் நடக்கவே முடியாத ஒன்று என்பது இதன் அர்த்தம்

டன் கைகுலுக்குதல் வேண்டும் என்ற சட்டத்தரணியின் ஆசை சில வேளை சாத்தியமாகி விடவும் கூடும். இப்படி வரலாற்றில் எத்தனையோ கைகுலுக்கல்கள் நடந்து தான் இருக்கின்றன. ஆனால் கைகுலுக்குவது இரண்டு மனிதர்கள் அல்ல, இரண்டு தேசத்தின் பிரதிநிதிகள் என்று அவை இருந்ததற்கு வரலாற்றில் உதாரணங்கள் சிலவே. சிங்கள தமிழ் இனங்களிடையேயான உறவின் சின்னமாக ஒரு கைகுலுக்கல் நிகழுமானால் அது பிரபாகரன் விஜேதுங்க கைகுலுக்கலாக இருந்தாலும் சரி அக்கறைக்குரியதுதான்.
ஆனால் அது சாத்தியமா?

இன்றைய நிலையில் இந்த இருவரதும் கைகுலுக்குதல் ஒன்று நடக்குமானால் அது இரண்டு தேசங்களின் பரஸ்பர கைகுலுக்கல் என்று அர்த்தப்படக்கூடியதாக இருக்குமா?
தமிழ் மக்களுக்கு எல்லாம் கொடுத்திருக்கிறேம்; வீதிகள், பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள் என்று பட்டியலிடும் அரசுத்தலைவருடன் கைகுலுக்குவதால் பிரபாகரனால் தமிழ் தேசிய இனத்துக்கு' எதை சாதித்துவிட முடியும். ஒரு தற்காலிக யுத்த நிறுத்தத்தையா? இதுதானா தமிழ் மக்களின் பிரச்சினை?
யுத்தம் என்பது, வெறுமனே வானத்தில் இருந்து பொழிகின்ற குண்டுகளும் வீசப்படுகின்ற ஷெல்களும் நிறுத்தப்படுமானால்
நின்றுவிடுமா?
'தமிழர்' என்ற 'தாழ்த்தப்பட்ட ஒரு தேசிய இனமாக' வாழ நிர்ப்பந்திக்கப்படுவது எல்லாவற்றையும் விட கொடிய யுத்தமல்லவா?
உண்மையில் இன்று நடைபெறும் யுத்தம் இதிலிருந்து விடுபடுவதற்காக தொடங்கிய ஒன்றல்லவா? சட்டத்தரணி அவர்களுக்கு வரலாறு மறந்து போய்விட்டதா? உண்மையில் சட்டத்தரணி அவர்கள் தமது யு.என். பியினரிடம் கேட்டிருக்க வேண்டியது பிரபாகரனுடன் கைகுலுக்குவதை அல்ல. அவர் கேட்டிருக்க வேண்டியதெல்லாம்,
வடக்கு கிழக்கில் நிலவுவது பயங்கரவாதப் பிரச்சினையே என்று கூறும் ஜனாதிபதியின் குருட்டுத்தனமான நிலைப்பாட்டை நிறுத்தச் சொல்லியே;
'வடக்கு கிழக்கு இணைப்பையோ, தமிழீழம் பிரிவதையோ ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன்' என்று முரண்டுபிடிக்கும் இனவாதத் தலைவராக அவர் இருப்பதை நிறுத்தும்படியே;

சட்டத்தரணி அவர்களது ஆசை நியாயமானது தான்! ஆனால் யூ.என்.பிக்கும் இஸ்ரேலிய அரசிற்கும் அடிப்படையில் ஒரு வேறுபாடு இருப்பதை அவர் கவனிக்கத் தவறிவிட்டார்!
அதுதான் கைகுலுக்கிக் கொள்வதற்காக அவர்கள் நீண்டநாள் பேச்சுவார்த்தைகளில் இரகசியமாக ஈடுபட்டார்கள், நோர்வேஜிய மத்தியஸ்தத்துடன் நடந்த இந்த பேச்சுவார்த்தையின் முடிவிலேயே, சில அடிப்படை உடன்பாடுகளுக்கு வந்த பின்னரே அவர்கள் கைகுலுக்கிக் கொண்டார்கள் என்பதாகும்.
யூ.என்.பியோ, அதன் இன்றைய தலைவர் விஜேதுங்க உட்பட்ட இதுவரை கால தலைவர்களோ எதிர்பார்த்த, எதிர்பார்க்கின்றதெல்லாம் முதலில் கைகுலுக்கிக் கொண்டு அப்புறம் பேச வேண்டும் என்பதையே!
ஆயுதத்தைக் கீழே போட்டுவிட்டு புலிகள் தம்முன்னால் நிராயுதபாணிகளாக வரவேண்டும்; தாம் சகல விதமான ஆயுத தளபாடங்களுடன் இருந்தபடி அவர்களுடன் கைகுலுக்கிக் கொள்ள வேண்டும்; அதன்பின் விரும்பியதைப் பேச வேண்டும் என்பதுதான் யூ.என்.பியின் நிலைப்பாடு.
அதைச் செய்யவென்று இந்திய மத்தியஸ்தத்துடன் வந்த முன்னைநாள் போராட்டக் குழுக்களின் இன்றைய நிலைமை யாரும் சொல்லித் தெரியவேண்டியதில்லை.
வடக்கு கிழக்கில் இருப்பது வெறும் பயங்கரவாதப் பிரச்சினையே என்ற அறிவிப்புடன் குண்டுமாரி பொழிந்து வடக்கு கிழக்கை சுடுகாடாக்கிய வண்ணம் 'நிராயுதபாணிகளாகிய பின்தான் பேசுவோம்' என்று அறிவிப்பவர்களால் இஸ்ரேலிய றொபினைப் போல கைகுலுக்

நன்றி - நூலகத்திட்டம்



## யாழ்ப்பாணம் இன்று — 9

### எதையும் எதிர் கொள்; முகம் திருப்பாதே, மனஞ்சலிக்காதே

அருணா பரமேஸ்வரன்

கிளிநொச்சிப்பகுதியிலிருந்து வன்னிப்படையும், இயக்கச்சிப்பக் கமிருந்து யாழ்ப்பாணப் படையும் முன்னேறின.

வன்னிப்படை காட்டிற்குள் இருந்தவர்கள். சைக்கிளில் திரிந்தவர்கள். சொகுசான வாழ்விற்கு அர்த்தம் தெரியாதவர்கள்.

வன்னிப்படையின் முன்னேற்றம் வேகமாக இருந்தது. யாழ்ப்பாணப்படை கொஞ்சம் மந்த கதி தான். ஆயினும் முன்னேறினார்கள்.

வான்படை, கடற்படை உதவிகொண்டு, சிறிலங்கா இராணுவம் எப்படியோ ஆனையிறவு இராணுவ முகாமைத் தக்க வைத்துக் கொண்டது.

ஒருநாள் பிந்தியிருந்தாலும் இராணுவ முகாம் புலிகளின் கைகளுக்குப் போவதை ஒருவராலும் தடுத்திருக்க முடியாது.

புலிகள் நிறைய இழந்தார்கள். களத்தில் வெற்றி கொண்டிருந்தால் இழப்பு தெரிந்திருக்காது. இப்பொழுது பேரிழப்பு.

ஊருக்கு ஊர், வீதிக்கு வீதி தமிழ்மகளோ தமிழ்மகனோ இந்தப் போரில் இறந்தார்கள். இழவு வீடு அது துயரம் தான்.

ஆனால் இப்போரில் மக்கள் பங்களித்தார்கள்.

பளையிலும், இயக்கச்சியிலும் மக்கள் காத்திருந்தார்கள். முதலுதவிப் பெட்டியுடன், உணவுடன், நின்றார்கள். எவ்வாறு உதவலாம் என்ற வினாவுடன் நின்றார்கள்.

கிளிநொச்சியில் இறந்து வருகிற வீரர்களின், உடலைச் சுத்தப்படுத்தி, குடலை வெட்டி, பின் உடலைத் தைத்து, வாசனைத்திரவியம் தெளித்து, வீரர்களுக்குரிய ஆடை அணிந்து, சவப்பெட்டியில் அடுக்கினார்கள்.

இதனை கிளிநொச்சிப் பாடசாலை மாணவ மாணவியர் செய்தனர். இரவிரவாக, பக்ல்பகலாக, சாமம்சாமமாகச் செய்தனர்.

பசிக்கிறது. சாப்பிடவேண்டும் பக்கத்தில் இறந்து போன உடல். சிதைந்து போன உடல். சாம்பிராணிப் புகையும் சேர்ந்து சவ நாற்றத்தைத் தருகிறது. ஆயினும் சாப்பிட்டார்கள்.

இறந்து போனது தங்கள் மகனா? சிதைந்திருக்கிற உடல் மகனுடையதா? என்று விசாரித்த பெற்றோர்கள் அந்த வீட்டில் குழுமினார்கள். அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும். இனி, இறந்து போய் வரப்போகிற உடலை எதிர் பார்த்து, ஒடுங்கிய முகத்துடன் தென்னை மரத்தின் அடியில் தாய் குந்தியபடி இருப்பார். கண்ணீர் ஒழுகும். புலிகளின் வாகனம் வர ஓடிப்போய் எட்டிப் பார்ப்பார்கள்.

ஒருமுறை இறந்து போன உடலைப் பார்த்த ஏழுவயதுச் சிறுவன் ''அப்பா'' என்று வெம்பி அழுதான். அவன் அம்மா அருகில் குமுறி அழுதாள்.

பார்த்துப் பார்த்து மற்றவர்களின் மனம்காய்த்தது.

அவலமான சூழல்

இறந்து போன உடலைச் சுத்தப்படுத்துகிற போது ஒரு வீரனின் சேட் பொக்கற்றுக்குள் ஒரு கடிதம். திறந்து பார்த்ததில் சிங்களத்தில் எழுதியிருந்தது.

புலிகள் தமது வீரர் என நினைத்து, சிறிலங்கா இராணுவ வீரர் ஒருவரது உடலை எடுத்து வந்திருந்தார்கள்.

அந்தச் சிங்களக் கடிதத்தின் கருத்து இதுதான்!

''அன்பின் காதலிக்கு, விரைவில் வந்து விடுவேன். அதிகாரி விடுதலை தருகிறாரில்லை. நான் நெருக்குகிறேன். ஒருமாதத்தில் விடுதலை கிடைக்கலாம். இன்னுமொரு மகிழ்ச்சியான செய்தி - வருகிற மாதமளவில் எனக்கு அனுராதபுரத்திற்கான இடமாற்றத்துடன் ஒரு மாத விடுதலை கிடைக்கும். அதன் பிறகு ஒவ்வொரு மாதமும் உன்னைச் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்பதுதான் இப்போது எனக்கு இனிப்பான விஷயம்.....''.

ஆனையிறவு கை நழுவி விட்டது. கவலை இருந்தது. ஊர் ஊராக இறப்பு என்பதில் சோகம் இருந்தது. கட்டி வைத்திருந்த சாப்பாட்டுப் பார்சலும், கட்டிலும், வாகனமும் எனக் காத்து நின்ற மக்களில் சலிப்பு இருந்தது.

ஆயினும் காத்திருந்தார்கள்.

தாண்டிக்குளத்தினூடாக வருவதற்கு எதனை விட்டார்கள்? சிறிலங்கா அரசு எவ்வளவு பொருட்களைக் கட்டுப்படுத்தி வைத்தார்கள்.

யாழ்ப்பாணத்திற்குள் அனுப்பக்கூடிய பொருட்களின் லிஸ்ட் மிகச் சிறியது. பருப்பு, உடுப்பு, இவை தாம். எண்ணிப் பார்க்கிறேன் ஒன்றும் வரவில்லை.

இதற்காக யாழ்ப்பாண மக்கள் சலித்தா விட்டார்கள்?

அட பற்றரி, பெற்றோல் தடை என்றால் கூடப் பரவாயில்லை. சின்னப்பை, சவர்க்காரம் என்றெல்லாம் தடை.

**''எதையும் எதிர்கொண்டார்கள் முகம் திருப்பவில்லை; மனம் சலிக்கவில்லை''**

மண்ணெண்ணெயும், வெஜிடபிள் ஒயிலும் (Vegetable oil) விட்டு வாகனம் ஓடியது. நல்லூர் முத்திரைச் சந்தியிலிருந்து தாண்டிக்குளம் வரைக்கும் பஸ் ஓடியது. டிராக்டர் வயல் உழுதது; சூடடித்தது. எதற்கும் அஞ்சவில்லை.

இவ்வாறு கூறுவதனாலெல்லாம், மக்கள் திருப்தியாக வாழ்ந்தார்கள் என்றோ, இத்தகைய அடக்குமுறையைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள் என்றோ பொருள் கொள்ள முடியாது.

இத்தகைய அடக்குமுறைகளை எதிர் கொண்டார்கள். அதுதான் உண்மை. முகம் கொடுத்தார்கள்; வெல்வதற்கு முயற்சித்தார்கள்.

தொடர்ந்து ஆறு மணித்தியாலம் சைக்கிள் ஓடுவது எவ்வளவு கடினம் என்பது ஓடிப்பார்த்தவர்களுக்குத் தெரியும்.

(வரும்)

## நாலு வார்த்தை எழுதவிடு

சூரியா

## 1992 இல் ஈழத்துக் கவிதை செத்து விட்டதா?

1992இல் வெளியான சில கவிதைத் தொகுப்புக்களைப் படிக்க நேர்ந்தது கவிதைத் தொகுதிகள் யாவும் ஈழத்துக் கவிஞர்களின் படைப்புக்கள்.

அவை பின்வருமாறு: **ஊரடங்கப் பாடல்கள் (தான்தோன்றிக் கவிராயர்) முகம் கொள் (கி.பி.அரவிந்தன்) நாங்கள் மனிதர் (முருகையன்) கீறல்கள் (தாமரைத் தீவான்) சந்தன மேடை (சண்முகலிங்கன்) சிதறல் (திவ்வியா) என் பிரிய ராஜகுமாரிக்கு (வி.மைக்கல் கொலின்)**

வாசித்து முடித்தவுடன் மனதில் தோன்றிய கேள்வி: **''1992 இல் ஈழத்துக் கவிதை செத்து விட்டதா?''**

யார் இதனை மறுப்பீர்கள்?

1960 இல் எழுதிய கவிதையும் இவற்றில் உண்டு. ஆனால் 1992 இல் வெளியிடப்பட்டது.

'பழம்பெரும்' கவிஞர் முருகையன் தொடக்கம் 'இளஞ்சிறு' கவிஞர் கி.பி அரவிந்தன் வரை இத்தொகுப்பில் கவிஞர் அடக்கம்.

முருகையனின் **நாங்கள் மனிதர்** கி.பி. அரவிந்தனின் **முகம் கொள்** தாமரைத்தீவானின் **கீறல்கள்** எனும் தொகுப்புக்களைத் தவிர்த்து, ஏனையவற்றைத் தொகுப்புக்களாகவே அங்கீகரிக்கவே முடியவில்லை.

21.5.71 இலிருந்து 9.7.71 வரை எழுதிய சுமார் நூறு கவிதைகள் தான்தோன்றிக் கவிராயரின் 'ஊரடங்குப் பாடல்கள்' தொகுப்பில் அடக்கம். நாலடி வெண்பாவிலும், ஈரடி வெண்பாவிலும் பாடிய கவிதைகள் அதிகம்.

''இம்மென்னும் முன்னே இருநூறும் முன்னூறும்,
அம்மென்றால் ஆயிரமும் பாடுகிற''

கவிஞர் தான்தோன்றிக் கவிராயர். ஆனால் கவிதையைக் காணவில்லை. நாயக்கர் காலத்துக்கேயுரிய வித்துவச் செருக்கும், சொல்லலங்காரமும், சிலேடை அணியும் எனக் கவிதை தூள் பறக்கிறது. சகித்துக் கொள்வது நம்கடன். உதாரணங்கள் காட்டவா?

என்மனம் மிக மென்மையானது. உண்மையில் நான் அழுதுவிட்டேன். சிறு அதிர்ச்சி கூட என்னால் தாங்க முடியாது. சண்முகலிங்கனின் **சந்தனமேடை**, திவ்வியாவின் **சிதறல்கள்**, மைக்கல் கொலினின், **என் பிரிய ராஜகுமாரிக்கு**, ஆகிய தொகுப்புக்கள் வாசித்தவுடன் என் அழுகையை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. என் கண்ணீர் பெருகியது.

என்ன செய்வது? நம் தலைவிதி. வசதி கருதி நாம் இவற்றைக் கவிதை என்கிறோம். இவ்வளவும் தான் சொல்ல இயலும்.

இவற்றிலிருந்து வேறுபட்ட கவித்தொகுப்பாக தாமரைத்தீவானின் **'கீறல்கள்'** முருகையனின் **'நாங்கள் மனிதர்'** கி.பி. அரவிந்தனின் **'முகம் கொள்'** ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

தாமரைத்தீவானுக்கு கவிதை இயல்பாக வருகின்றது. யாப்பமைதியும், பேச்சோசைப் பண்பும் அவர் கவிதைக்கு துணை புரிகின்றன. அகதி வாழ்வும், காட்டு வாழ்க்கையும், இவர் கவிப்பொருளானது. ஆதலினால் கவிதை நெஞ்சில் உறைக்கிறது. அவல வாழ்வு, இவர் கவிதையில் இயல்பாக வருகிறது.

**''தூக்கடா சாமான் சட்டை
தூரத்தில் வெடிச்சத்தங்கள்
கேட்குதாம்! செவிடன் போலே
கிடக்கிறாய்! எழும்பு தூக்கு..''**

இப்படிப் போகிறது ஒரு கவிதை. **''அழிந்து போய் விடலாம், ஆனால் அவதிகள்பட ஏலாத''** கவிதைகள் இவருடையன. இவர் கவிதை சொல்லும் செய்தி அசலானது. அதனால் இக்கவித்தொகுப்பு உயிர்பெறுகிறது. இவர் கவிததையில் சில வரிகளை இதற்கு உதாரணமாக்குகிறேன்.

**''ஆமியாம் பசளைப் பையில்
ஆறேழைக் கொண்டுவாடி
மாமியைக் கூட்டி வாடி!
மச்சாளும் வரட்டும். எங்கள்
சாமியே முருகா இந்தச்
சாமானைக் காப்பாற்றப்பா!
நாமிதைக் கட்டிக்காவி**

**நடந்திடா நாள் வராதோ?
சுருட்டடி பாயைக் கட்டுச்
சுருட்டையும் எடுத்துக்கொள்ளு!
உருட்டடி இடித்துச்சப்பும்
உரலையும் மறந்திடாதே!
வெருட்டுவார் இடையில் கண்டால்
விரித்தெலாம் காட்டவேண்டும்!
இருட்டிலும் நடக்க வேண்டும்!
எடுத்தெலாம் கட்டித்தூக்கு!**

**ஆக்கிய சோற்றைத்தின்ன
அவகாசமில்லையென்றால்
தூக்கடி கறியும் கொஞ்சம்
சொதியையும் விட்டுத் தூக்கு!
நாக்கெலாம் காஞ்சும் போச்சு!
நடநட ஆமிவந்தால்
போக்குவான்! அதற்குமுன்னர்
போகலாம் காணாக்காடு!**

**இல்லையாம் ஆமி வாடி!
இறக்கடி சோற்றைப்போடு!
சொல்லியே பொய்யை நம்மைச்
சோதித்தும் பார்க்கிறார்கள்!
தொல்லைதான் இனிமேல் மூட்டை
தூக்குதல் வேண்டாம்! வந்தால்
கொல்லட்டும்! கைலாயம் போய்க்!
குடியமர்ந்திருந்து பார்ப்போம்**

இவ்வளவும் போதும்; இவர் தொகுப்பு விளங்க.

**முருகையன்** கவிதை இயல்பானது. சொற்களை அடுக்கிற விதமும், அது தரும் உணர்வும், முருகையனைக் கைதேர்ந்த கவிஞனாகக் காட்டுகிறது. ஆனால் **நாங்கள் மனிதர்**தொகுப்பில் விஷேசமாகச் சொல்ல ஒன்றுமில்லை. முருகையனின் 'பத்தோடு பதினொன்றாவது' தொகுப்பு இது. முருகையனின் கவிதையின் பலவீனம் அவர் கவிதை காலத்துடன் ஒட்டுகிறது இல்லை. அவர் தொகுப்பை வாசித்து முடிக்கிற போது ஒன்றும் நினைவில் நிற்கிறாற் போல் தெரியவில்லை. **'வாயடைத்துப் போனோம்'** போன்ற கவிதைகளில் உயிர்ப்பு இருக்கிறது. மற்றைய கவிதைகள் பூடகமாகப் பேசுகின்றன. பூடகமாகப் பேசுவன உயிர்ப்பற்றன எனக் கூற முடியாவிடினும், எப்போதும் பூடகமாகத்தான் கவிதைகள் வரவேண்டுமா?

**'முகம்கொள்'** கி.பி.அரவிந்தனின் உள்ளத் துடிப்பு. கி.பி.அரவிந்தனுக்கு ஏக்கம் இருக்கிறது. ''பிரிவு, அலைவு.தனிமை, தோல்வி, இழப்பு,அவமதிப்பு,ஏக்கம்,ஏமாற்றம், துயரம் அவனுக்கு இயல்பானது. தொடர்வது இவற்றை எழுத்துக்குள் ஒட்டச் செய்யாதது அவன் குறைபாடு'' எனும் ஏக்கம் இருக்கிறது. ''நட்பு,நேசம்,தோழமை,காதல்,கனிவு, மனிதம்...அவை வசப்படவில்லையாயின் அது என் மொழியறிவின் பற்றாக்குறையே. வெட்கம் கொள்கிறேன்'' என்றும் கூறுகின்றார். இவ்வாறெல்லாம் அவர் தன்னைத் தாழ்த்திக் கொள்ளத் தேவை இருக்கவில்லை. யாழ்ப்பாணம்,தமிழ்நாடு,ஐரோப்பா ஆகியன இவர் கவிதையின் வாழிடங்கள். இவை சரியாகப் பதியப்பட்டுள்ளன. போராட்டம், அது குறித்த ஏக்கம், சிறுவெட்கம், தொடர்ந்த நம்பிக்கை இவர் கவிதைப்பொருள் சிறப்பானது. **''உழு/ மறுத்துழு/மீளவும் மீளவும்/ பண்படும் நிலம்''** என்பது இவர் வரி. ''நண்பர்களே இது விடைபெறும் நேரம் தானா என்பது தீர்மானமாகவில்லை'' என்கிறார்.
எளிமை இன்னும் வேண்டுமென இவர் தொகுப்பு அவாவி நிற்கிறது.

ஆயினும், தமிழில் குறிப்பிடத்தகுந்த குறிப்பிட வேண்டிய தொகுப்பு முகம்கொள்.

ஆரம்பத்தில் ஒரு வினா தொடுத்திருந்தேன். ''1992 இல் ஈழத்துக் கவிதை செத்து விட்டதா? ''


விடை:''சாகத்தான் இருந்தது. அரவிந்தனும், முருகையனும்,தாமரைத்தீவானும் கொஞ்சம் உயிர் கொடுத்தார்கள். **விஜயேந்திரனும்,சோலைக்கிளியும்** இன்னும் உயிர் கொடுக்கலாம்''

நன்றி - நூலகத்திட்டம்



# எனது விடுதலை தொடர்பான தொண்டமானின் நிலைப்பாடு எவரையும் சந்தேகிக்க வைக்கும்

சந்திரசேகரன்



**மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் அவர்கள் கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்பிற்குக் காரணமான வரதனுக்குப் புகலிடம் கொடுத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் 91ம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.**

**கூடவே மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் அப்துல் பாவா காதர், உபதலைவர் வி.ரி.தர்மலிங்கம், அமைப்பாளர்கள் இரா.இராஜாராம், இரா.இராமகிருஷ்ணன் ஆகியோரும் கைது செய்யப்பட்டு இற்றைவரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.**

**தடுப்புக்காவலிலுள்ள சந்திரசேகரனை சரிநிகர் சந்தித்து உரையாடியது. உரையாடலின் சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.**

**● இ.தொ.காவிலிருந்து நீங்கள் வெளியேறியமைக்கான காரணங்கள், மலையக மக்கள் முன்னணியின் தோற்றம் என்பன பற்றி சுருக்கமாக கூற முடியுமா?**

நான் இ.தொ.காவில் இணைந்து செயற்பட்ட காலத்தில் மலையக மக்களின் எதிர்கால விமோசனத்துக்கு தொலைநோக்குப் பார்வையோடு அரசியல் திட்டங்கள் வகுத்துச் செயற்பட வேண்டும் என வலியுறுத்தி வந்துள்ளேன். எனது கருத்துக்களுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு கூடிய வேகத்தில், என்னைப்பற்றிய தப்பான கணிப்பீடும் சந்தேகப்பார்வையும் இ.தொ.காவில் வலுப்பெற்று பரவ ஆரம்பித்தது. அவர்களின் பார்வையில் நான்''கட்சிக்கு முரணாக கருத்துச் சொல்பவனாக'' தோற்றம் தந்தேன்.

இ.தொ.காவின் அரசியல் அணுகுமுறையும்,தங்களின் அரசியல் நிலைப்பாட்டில் அவர்கள் கொண்டுள்ள அப்பாவித்தனமான அதீத நம்பிக்கையும் மலையக சமூகத்தை தப்பான திசையில் நகர்த்திக் கொண்டிருந்ததை என்னால் உணர முடிந்ததால் அவர்களோடு சமரசம் செய்து கொள்ள முடியவில்லை.

அதேசமயம் அவர்களும் என்னை, 'ஒத்துப் போகாதவனாக' தீர்மானித்து ஒதுக்கி வைக்க எடுத்த முயற்சி, எனக்கும் இ.தொ.காவுக்கும் இடையிலான இடைவெளியை அதிகப்படுத்திக் கொண்டே போயிற்று. 1989ம் ஆண்டு பொதுத் தேர்தலில் இ.தொ.காவின் வேட்பாளர் பட்டியலில் எனது பெயர் சேர்க்கப்படாமை என்னை இ.தொ.கா. புறக்கணிப்பதின் உச்சக்கட்ட வெளிப்பாடாக கருதி எனது ஆதரவாளர்கள் , என்னைத் தனியாகப் போட்டியிடும்படி வற்புறுத்தினார்கள். இந்நிலையில், எனது அரசியல் கொள்கையா? இ.தொ.காவின் உறவா? என தீர்மானிக்கும் கட்டாயம் எனக்கு ஏற்பட்டது.

இதன் முடிவே என்னை இ.தொ.காவிலிருந்து விடுவித்து கொள்ள நிர்ப்பந்தித்தது.

தேர்தல் வேட்பாளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டிருந்தால் இ.தொ.காவிலிருந்து நான் வெளியேறும் காலம் இன்னும் பின்தள்ளப் பட்டிருக்கலாம்தான். ஆனால் அவர்களின் அரசியல் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படாத வரையில் தவிர்க்க முடியாததாகவே இருந்திருக்கும்.

**● தங்களை மத்திய மகாண சபையில் சத்தியப்பிரமாணம் எடுக்க விடாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் இ.தொ.காவும் மறைமுகமாக தொழிற்படுகின்றதென்று பரவலாக பேசப்படுவதைப்பற்றி தங்களுடைய அபிப்பிராயம் என்ன?**

இதற்கு ஆதாரமெதுவும் என்னிடமில்லை. ஆனால் இ.தொ.கா. தலைவர் தொண்டமான் இது தொடர்பாக தனது விருப்பமின்மையை வெளிப்படுத்தும் வகையிலேயே கருத்து தெரிவித்திருக்கின்றார். எனது பிரசன்னத்தை நியாயப்படுத்தியும் வலியுறுத்தியும் மத்திய யாகாண ஆளும் கட்சியினர் கூட எதிர்க்கட்சியினரோடு சேர்ந்து அபிப்பிராயம் தெரிவிக்கும் போது தொண்டமானின் நிலைப்பாடு எவரையும் சந்தேகம் கொள்ளவே வைக்கும்.

**● மலையக மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக பல்வேறு யோசனைகள் பலதரப்பட்டவர்களாலும் முன்வைக்கப்படுகின்றன. இது தொடர்பான தங்கள் அமைப்பின் நிலைப்பாடு யாது?**

இது தொடர்பான எ்மது அமைப்பின் கோரிக்கையை, இனப்பிரச்சினை தீர்வுக்காக ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் சகல தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் நாம் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் விளக்கியுள்ளோம்.

''மலையக மக்கள் செறிவாக வாழும் பிரதேசத்தை வரையறுத்து அப்பிரதேசத்தில் அவர்களின் அரசியல், பொருளாதார, கலாசார உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்'' என்பதே எமது நிலைப்பாடாகும்.

மலையக மக்கள் அரச நிர்வாக எல்லைகளால் பிளவுபடுத்தப்படுவதும் சிதறடிக்கப்படுவதும், எல்லா நிர்வாக எல்லைக்குள்ளும் சிறுபான்மையினராகவே இருக்கக்கூடிய நிலையை ஏற்படுத்திக் கொண்டிருப்பதும் இம்மக்களின் தனித்துவத்திற்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாகவே முடியும்.

ஏற்கனவே பல தகுதிகளை எமது சமூகம் இழந்துள்ள நிலையில் மேலும் இப்போக்கை அனுமதிப்பது எதிர்காலத்தில் மீளமுடியாத சீரழிவில் மலையகம் வீழ்வதற்கு துணைபோவதாகவே முடியும்.

**''மலையக மக்கள் செறிவாக வாழும் பிரதேசத்தை வரையறுத்து அப்பிரதேசத்தில் அவர்களின் அரசியல், பொருளாதார,கலாசார உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்''**

மலையக மக்களை பெரும்பான்மையினராகக் கொண்ட மாகாண சபை ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கை, தற்போதைய மாகாண சபை முறையில் எமக்கேற்பட்டு விட்ட மோகத்தால் தோன்றிய கோஷமல்ல. இது மலையக சமூகம் இந்நாட்டில் நிம்மதியாகவும், நிரந்தரமாகவும் வாழ்வதற்கேற்ற சூழலை தோற்றுவிப்பதற்கு ஒரு ஆரம்பமாக அமைய முடியுமெனக் கருகின்றோம்.

**● மலையகத்திற்கு வெளியே வாழும் இந்திய வம்சாழியினரின் பிரச்சினை தொடர்பாக தங்கள் அமைப்பின் நிலைப்பாடு யாது? இதுவரை அவர்கள் தொர்டர்பாக நீங்கள் அக்கறை காட்டாததின் காரணம் என்ன?**

மலையக மக்களின் எதிர்கால தீர்வுக்காக முன்வைக்கப்படும் கருத்துக்கள் தேசிய ரீதியில் போதுமான தாக்கத்தை இன்னும் ஏற்படுத்த தொடங்கவில்லை என்பதோடு, அந்த கோரிக்கையின் அவசியமும் நியாயமும் மலையக மக்களுக்கே இன்னும் பூரணமாக பிரச்சாரப்படுத்தப்படவில்லை என்பதையும் நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

இந்நிலையில், மலையக மக்கள் செறிவாக வாழும் பிரதேசத்துக்கான அரசியல் தீர்வைப் பிரதானப் படுத்தி அதற்கான அங்கீகாரத்தையும், ஆதரவையும், ஈடுபாட்டையும் மலையக மக்களிடம் ஏற்படுத்துவதிலேயே கூடுதல்கவனம் செலுத்த நேர்ந்துள்ளது.

மலையகத் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தில் சிங்கள மக்களின் சுதந்திரத்தையும்,உரிமையையும், தனித்துவத்தையும் நாம் மதிப்பதைப் போல, சிதறி வாழும் மலையக மக்களின் நிலையும் அமைய வேண்டும் என்பதில் நாம் உறுதியோ்டிருப்போம்.

**● மலையக மக்களின் போராட்டத்தையும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் போராட்டத்தையும் இணைக்கலாமா? எவ்வாறு இணைக்கலாமென தாங்கள் கருதுகின்றீர்கள்?**

வடக்கு-கிழக்கு மக்களும், மலையக மக்களும் இந்நாட்டின் சிறுபான்மை தேசிய இனங்கள் என்பதால் இவர்களின் அரசியல் தீர்வுக்கு முன்வைக்கப்படும் கருத்தில் ஒரு பொதுத் தன்மை இருக்கிறது என்ற ரீதியில் ஒருவருக்கொருவர் ஆதரவு தந்து பலம் சேர்க்க வேண்டும் என்பதில் எமக்கு எந்த முரண்பாடும் கிடையாது.

இவ்வினங்களின் தனித்தனியான கோரிக்கைகளுக்கு அரசை இணக்கப்பாட்டுக்கு கொண்டு வரவும், சர்வதேச ரீதியில் அரசுக்கு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தவும் ஒரு பொது வேலைத்திட்டத்தில் நாம் வடக்கு கிழக்கு அரசியல் மைப்புகளோடு புரிந்துணர்வோடு அவசியமான போதெல்லாம் இணைந்து செயற்படுவதை வரவேற்கிறோம்; வலியுறுத்துகிறோம்.

**● ஸ்ரீ.ல.சு.க.ஒரு இனவாத கட்சி என்பது யாவரும் ஏற்றுக் கொண்டுள்ள விடயம். அக்கட்சியுடன் சேர்ந்து பல நடவடிக்கைகளில் தங்கள் கட்சி ஈடுபட்டிருந்தது. 1991ல் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலிலும் கூட்டாக பங்கு பற்றியிருந்தது. இக்கூட்டு நடவடிக்கைகள் எந்தளவுக்கு மலையக மக்களுக்கு பயனளிக்கும் என நீங்கள் கருதுகின்றீர்கள்?**

ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் தனிப்பட்ட அரசியல் உறவொன்றும் எமக்கு கிடையாது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சில பிரச்சினைகளில் இந்நாட்டு எதிர்கட்சிகளோடு இணைந்து எமது பங்களிப்பையும் செய்து வந்திருக்கிறோம் என்பது மட்டுமே உண்மையாகும்.

உள்ளூராட்சி தேர்தலில் கூட பல எதிர்கட்சிகளையும் இணைத்து தற்காலிக தேர்தல் கூட்டைத்தான் ஏற்படுத்தி கொண்டோமே தவிர ஸ்ரீ.ல.சு.கட்சியோடு மட்டும் உறவு என்ற கூற்று தவறானதாகும். இத்தகைய எண்ணம் பலருக்கும் ஏற்பட எமக்கெதிரான அரசியல் அமைப்புக்களின் பிரச்சார தந்திரமும், ஸ்ரீ.ல.சு.கட்சி எதிர்கட்சிகளில் கூடிய பலம் வாய்ந்தது என்பதும் காரணமாயின.

நாம் மலையகத்தில் சுய பலத்தோடு காலூன்றுவதற்கு இத்தகைய தேசிய கட்சிகளுடனான தொடர்பு சில சந்தர்ப்பங்களில் தற்காலிக சௌகரியங்களை ஏற்படுத்தியிருப்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் நாம் எந்த நேரத்திலும் ஸ்ரீ.ல.சு.கட்சியை கண்மூடித்தனமாக நியாயப்படுத்தியதும் கிடையாது.

எமது அரசியல் நிலைப்பாடு வலுப்பெறும் போது அதை நியாயப்படுத்தும் உறவுகள் மட்டுமே எஞ்சியிருக்கும் என்ற தெளிவுடனேயே எமது ஒவ்வொரு அடிகளையும் எடுத்து வைக்கின்றோம்.

**● தோட்டங்கள் மீளவும் தனியார் மயமாக்கப்பட்டமை மலையகத்தில் என்ன விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது? விளக்குவீர்களா?**

இரண்டு பிரதான விளைவுகளைக் கூறலாம்.

1)மலையக மக்களுக்கு காணி,வீடு,தொழில் வாய்ப்பு வழங்குகின்ற பொறுப்பிலிருந்து அரசு தப்பித்துக் கொள்ள வழி ஏற்பட்டுள்ளது.

2) தனியார் கம்பனிகள் தோட்டங்களை கையேற்றதும், தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைத்தல், பெருந்தோட்ட தொழில் துறையை கைவிட்டு வேறு தொழில் முயற்சிகளுக்கு வெளியாரை புகுத்துவது, லாபநோக்கத்தை மட்டுமே பிரதான இலக்காகக் கொண்டு தொழிலாளர்களின் நலன்களை உதாசீனம் செய்வது, மலையக மக்களின் அரசியல் உரிமையைக் கட்டுப்படுத்த முனைவது, போன்ற நடவடிக்கைகளின் அடையாளம் ஏற்கனவே பரவலாக தெரியத் தொடங்கி விட்டன. இதனை மலையக மக்களின் தொழிலோடு மட்டும் தொடர்புடைய பிரச்சினையாக நாம் கருதவில்லை. இதுவரை காலமும் தொழில்ரீதியாக பாதுகாக்கப்பட்டு வந்த சமூக கட்டமைப்பு தகர்க்கப்படப் போகின்றது.

**''மலையக மக்களை பெரும்பான்மையினராகக் கொண்ட மாகாணசபை ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை மாகாணசபை முறையில் எமக்கேற்பட்ட மோகத்தால் தோன்றிய கோஷமல்ல. இது இந்நாட்டில் மலையக சமூகம் நிரந்தரமாகவும், நிம்மதியாகவும் வாழ்வதற்கேற்ற சூழலைத் தோற்றுவிப்பதற்கு ஒரு ஆரம்பமாக அமையுமெனக் கருதுகிறோம்.''**

இந்நேரத்தில், அரசியல் ரீதியான தீர்க்கதரிசனமிக்க கண்ணோட்டத்தோடு இப்பிரச்சினை அணுகப்படாவிட்டால் இம்மக்கள் சிதறடிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். பரவிவரும் வறுமையிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள வருவாய் தேடி- தாம் வாழும் பிரதேசத்தை விட்டு- இவர்கள் இடம் பெயர நிர்ப்பந்திக்கப்படுவார்கள். இந்நாட்டில் தமக்குரிய உரிமைகளை கோருவதற்கு தற்போதிருக்கும் தகுதிகள் கூட இவர்களுக்கு இல்லாமல் போகக் கூடிய அவலம், ஆபத்து தற்போது ஏற்பட்டு வருவதை நாம் அவதானிக்கக் கூடியதாவுள்ளது.

→ 8

நன்றி - நூலகத்திட்டம்



பொழுது சாயும் நேரம். சூரியன் படுவான் கரைக்குள் விழுந்து கொண்டிருக்கிறது. மட்டக்களப்பு நகரம் அன்றைய நாளின் இறுதிக் கடமைகளை வேகமாக முடித்துக் கொண்டிருந்தது. கிராமங்களிலிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் வேறுபல வேலைகளின் நிமித்தமும் நகருக்கு வந்தவர்கள் ஐந்து மணிக்கே தமது வேலைகளை முடித்துக் கொண்டு திரும்பி விட்டார்கள்; இருட்டுவதற்கு முன் முகாம்களைக் கடந்து வீடு போய்ச் சேர்வதற்காக, நகரை அண்டியுள்ள வாடிக்கையாளர்களுக்காக கடைச் சிப்பந்திகள் சாமான் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். நகரை அண்டியிருந்தாலும் இருட்டு முன் போய்ச் சேர்ந்து விடுவது ஒரு நிம்மதி. ரியூட்டரி வகுப் பொன்று முடிந்திருக்க வேண்டும். பாடசாலைச் சீருடைகளுடன் மாணவர்கள் 'விர்' எனப் பறந்தனர் சைக்கிள்களில். நகரின் மின் விளக்குகள் மின்னிக் கொண்டிருந்தன. தமிழ்ப் பட வில்லன் நாயகியை துகிலுரியும் காட்சியை (கட் அவுட்) ரசித்தபடி ஒரு கூட்டம் 6.30மணிக் காட்சிக்காகக் காத்து நின்றது.

மட்டக்களப்பு நகருக்குள் முதன்முதலாக வந்து இறங்குகின்ற ஒருவருக்கு எல்லாம் வழமைப்படி மிகவும், மிகவும் சாதாரணமாக இருப்பது போன்ற அபிப்பிராயமே தோன்றும். பஸ் நிலையத்தில் ஒரு சில வினாடிகள் தரித்து நின்று பார்த்தால் படிப்படியாக மட்டக்களப்பு நகரின் வேறு சில அம்சங்களும் தெரியும். பஸ்ஸில் இருந்து இறங்குகின்ற பயணிகள் ஒவ்வொருவராக தமது பயணப் பொதிகளுடன் பொலிஸ் நிலையம் முன்பாக உள்ள பொலிஸ் பரிசோதனை நிலையத்தை நோக்கி நடக்கின்றனர். முதலில் அவர்களது பொதிகள், பின்னர் அவர்கள் என்று பரிசோதனை முடிந்து வெளியேறுபவர்களின் முகத்தினை கூர்ந்து கவனித்தால் ஒன்றைப் புரிந்து கொள்ளலாம். அவர்கள் மீதான கடைசிப் பரிசோதனையும் முடிந்து விட்டது என்ற திருப்தி அவர்கள் முகத்தில் இல்லை. அடுத்ததாக நுழையப் போகும் இன்னொரு சென்றிப் பொயின்ற் பற்றிய எண்ணத்துடன் மூட்டைகளை பாதி கட்டியதும் பாதி கட்டாததுமாக பரபரப்படைகிறதை அவதானிக்கலாம்.

ஆனால் இத்தனை கெடுபிடிகளையும் மீறி அங்கும் சில நிகழ்ச்சிகள் நடக்கத்தான் செய்கின்றன. கல்லடிப் பாலத்தை அண்மித்து இருக்கும் 'சென்றிப் பொயின்றுக்கு'ப் பக்கத்தில் விடுதலைப் புலிகளின் எச்சரிக்கைச் சுவரொட்டிகள் திடீரென்று முளைக்கின்றன. அண்மையில் சுபராஜ் படமாளிகைக்குள் ஆயுதத்துடன் ஒரு இளைஞர் பிடிபட்டிருக்கின்றார்.

இப்படியான வேளைகளில் எல்லாம் சுற்றிவளைப்புகள், சோதனைகள் தீவிரப்படுகின்றன. சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்படுகின்றார்கள்; கைது செய்யப்படுபவர்கள் மேலதிக விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இப்படி அழைத்துச் செல்லப்படுபவர்களுக்கு எதுவும் நடக்கலாம்... அதுவும் 'காட்டிலாக்கா கந்தோரு'க்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள் திரும்பி வருவது அபூர்வம் என்று கூறப்படுகிறது...

இந்தக் காட்டிலாக்காக் கந்தோரில் அப்படி என்னதான் நடக்கிறது?

நிவாரணம் கிடைக்கிறதோ இல்லையோ பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகாமல் அவர்கள் தப்புவது அபூர்வம் என்கிறார்கள் அங்குள்ள மக்கள். காட்டிலாகா கந்தோர் (இப்போது 'காட்டுக் கந்தோர்' என்று அழைக்கப்படுகின்றது) இன்று ஒரு பயங்கரமான பலிக்களமாகப் பேசப்படுகிறது. இலங்கையில் வேறெங்கும் இல்லாதவாறு பெருமளவு விதவைகளைக் கொண்டுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் நிவாரணம் பெறுவதற்காகப் போய் வெற்றி பெற்றவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்த பெண்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் சில பெண்களுக்கு ஆசிரியர் பதவி வழங்கும் திட்டமொன்றை அரசு அறிவித்திருந்தது. இதன்படி விண்ணப்பித்த விண்ணப்பங்களைப் பரிசீலித்துத் தகுந்த நபர் எனப் பரிந்துரை செய்யும் பொறுப்பு 'காட்டிலாகா'விடம் கொடுக்கப்படிருந்தது. தனது விண்ணப்பத்தைக்

யூரியா தேவையில்லை. இல்லாமல் விவசாயம் செய்ய முடியாவிட்டால் சும்மா இருங்கள் என்பது அரசின் அபிப்பிராயம் போலும்!

வாழைச்சேனை முதல் கல்லாறு வரையான கரையோரப் பகுதி முழுவதும் -எழுவான் கரை- இன்று அரச பட்டாளத்தினால் 'விடுவிக்கப்பட்ட' பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமங்கள் முழுவதும் திரும்பவும் இந்தியப் படை கால முறைகள் புகுத்தப்பட்டு, பட்டாள காவல் அரண்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கிராமங்களுக்கான முழு நிர்வாகமும் அங்குள்ள காவல்நிலையத்தாலேயே மேற்கொள்ளப்படுகிறது. கிராமங்களிலுள்ள மக்கள் வெளியே போகும் போதும் வரும் போதும் அக் காவல் நிலையங்களூடாகவே செல்ல வேண்டும்.

## கடைக்காரர்களிடம் பட்டியல் கேட்கப்படுகிறது

கடைச் சொந்தக்காரர்கள் மட்டக்களப்பு நகருக்குப் பொருட்களை வாங்கி வரப் போகுமுன்பாகத் தமது கடைகளுக்குத் தேவையான பொருட்களின் பட்டியலைக் காவல் நிலையத்தில் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். காவல் நிலையத்திலுள்ளவர்கள் அந்தப் பட்டியலைப் பரிசீலிக்கிறார்கள். கிராமத்தில் உள்ளவர்களின் தொகையைப் பொறுத்தும் கடைகளின் எண்ணிக்கைகளைப் பொறுத்தும் ஒவ்வொரு கடைக்காரரும் எவ்வளவு பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் எனத் தீர்மானிக்கிறார்கள். பட்டியல் திருத்தப்படுகிறது.

அப் பட்டியலுடன் நகருக்கு வரும் கடைக்காரர் பட்டியலைக் கொடுத்துப் பொருட்களை வாங்கித் திரும்புகிறார். அவரது பட்டியலும் வாங்கிவரும் பொருட்களும் திரும்பவும் இராணுவக் காவல் நிலையத்தில் வைத்துச் சரி பார்க்கப்படுகின்றன. இடையில் இராணுவத்தாருக்குத் தேவையான சவர்க்காரம், பற்பசை, சிகரெட் போன்றவை எடுக்கப்பட்ட பின் மீதியைக் கடைக்காரர் கிராமத்திற்குக் கொண்டு செல்கிறார். புலிகளுக்குப் பொருட்கள் போய்ச் சேராமல் இருப்பதற்காகவே இந்த ஏற்பாடு என்கிறார் மட்டக்களப்புப் பிரிகேடியர் றொஹான் குணவர்தன!

இப்படி நடக்கிறது மட்டக்களப்பு 'சிவில்' நிர்வாகம்!

## புலி என்று சொல்லி

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்த பெண்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் சில பெண்களுக்கு ஆசிரியர் பதவி வழங்கும் திட்டமொன்றை அரசு அறிவித்திருந்தது. இதன்படி விண்ணப்பித்த் விண்ணப்பங்களைப் பரிசீலித்துத் தகுந்த நபர் எனப் பரிந்துரை செய்யும் பொறுப்பு 'காட்டிலாகா'விடம் கொடுக்கப்படிருந்தது. தனது விண்ணப்பத்தைக் கொண்டு சென்ற பெண் ஒருவருடைய கொல்லப்பட்ட கணவர் 'புலி' என்று கண்டுபிடித்து அவரது விண்ணபத்தை நிராகரித்து விட்டது 'காட்டுக் கந்தோர்'

''உண்மையில் எனது கணவரைக் கொன்றதே புலிகள்தான்!'' என்று வேதனையுடன் குறிப்பிட்டார் அப் பெண்மணி.

## ஐ.பி.கே.எப் கால சென்றிகள் புதுபிக்கப்படுகின்றன

பஸ் நிலையத்தையும் அதைச் சுற்றியுள்ள கடைத் தொகுதிகளையும் விட்டு அப்பால் செல்கின்ற அனைத்துப் பாதைகளிலும் பழைய ஐ.பி.கே.எப் காலச் 'சென்றிகள்' புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. வெளியேறும் ஒவ்வொருவரும் திரும்பவும் சோதிக்கப்படுகிறார்கள். சைக்கிளிலோ, மோட்டார் சைக்கிளிலோ வருபவர்கள் இறங்கி நடக்கிறார்கள். பரிசோதனைக்காக தமது அடையாள அட்டைகளையும் பொதிகளையும் பிடித்தபடி கியூக்களில் சேர்ந்து கொள்கின்றார்கள்...

அரசாங்கமும் பத்திரிகைகளும் தெரிவிக்கின்ற அமைதி இதுதான் என்றால், அது அங்கு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இந்த ஒவ்வொரு அமைதியான கணத்திற்குப் பின்னாலும் எதுவும் நடக்கக் கூடும் என்ற அச்சம் கலந்த ஒரு எதிர்பார்ப்பு ஒவ்வொரு முகம்களிலும் செருகப்பட்டிருக்கின்றது. எல்லாவிதமான கெடுபிடிகளும் நாளாந்த வழமையாகி விட்டபின், அதை அமைதி என்று பெயர் சூட்டிக் கொள்வது எவ்வளவு சுலபம்! ஆம் நகருக்குள் பஸ்கள் வருகின்றன. பயணிகள் வருகின்றனர்; கடைகள் இயங்குகின்றன. எவ்வளவு அமைதியாக இருக்கிறது நகரம்!

'காட்டுக் கந்தோர்' முன்னர் காட்டிலாகா அதிகாரியின் கந்தோராக இருந்தது. இப்போது அங்கு புலனாய்வுப் பிரிவினரே குடி கொண்டிருக்கிறார்கள். சந்தேகத்தின் பேரில் கைதாகுபவர்கள் விசாரணைக்காக இங்கு கொண்டு வரப்படுகிறதும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதும் மிகச் சாதாரணம். 'விசாரணை'க்கென காட்டுக் கந்தோருக்கு கொண்டு வரப்பட்டவர்களில் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் யாரும் இதுவரை விடுதலையானதில்லை என்கிறார் பெயர் குறிப்பிடத் தயங்கும் வயோதிபர் ஒருவர்.

கொண்டு சென்ற பெண் ஒருவருடைய கொல்லப்பட்ட கணவர் 'புலி' என்று கண்டுபிடித்து அவரது விண்ணப்பத்தை நிராகரித்து விட்டது 'காட்டுக் கந்தோர்'

''உண்மையில் எனது கணவரைக் கொன்றதே புலிகள்தான்!'' என்று வேதனையுடன் குறிப்பிட்டார் அப் பெண்மணி.

சகல அரசு தொடர்பான விடயங்களுக்கும் சிபாரிசு செய்யும் பொறுப்பை ஏற்றுள்ள 'காட்டுக் கந்தோர்'தான் மட்டக்களப்பு 'சிவில் நிர்வாகத்தின்' பிரதான மையம்!

## காட்டுக்கந்தோர்

யுத்தத்தின் போது கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு அரச நிவாரணம் வழங்குவற்காக விண்ணப்பப்படிவங்கள் கொடுக்கப்படுகின்றன. கொல்லப்பட்டவர் 'புலி' அல்ல என்று உத்தரவாதப்படுத்தினால்தான் நிவாரணம் கிடைக்கும். முன்னர் பொலிஸார் தான் இதற்குப் பொறுப்பாக இருந்தார்கள். இப்போது இந்தக் காட்டுக் கந்தோரிலுள்ள புலனாய்வுப் பிரிவினர் கொல்லப்பட்டவர் புலி அல்ல என்று உத்தரவாதப்படுத்த வேண்டுமாம். நிவாரணப் படிவத்துடன் போகும் விதவைப் பெண்களுக்கு

## சுற்றி வளைப்புகள்

நகரப் புறத்தை விட கிராமங்களில் பாதுகாப்பு நிலைமை மோசமாக உள்ளது. கிழக்கில் புலிகளை ஒழித்து விடுவது என்று பட்டாளத்தினர் கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படுகின்றார்கள். ஆனால் பாவம்! அப்பாவிப் பொதுமக்களே

## கிராமங்களில் ஒரு புதிய உலகம்

மட்டக்களப்பு நகரினை விட்டு வெளியேறி கிராமங்களைப் பார்க்கப் புறப்பட்டால், ஒரு புதிய உலகத்தை அங்கே காண்முடிகிறது. நகரத்திலிருக்கும் தற்காலிக அமைதி கூட அங்கில்லை. கிராம மக்களின் அன்றாட வாழ்க்கை அரசாங்கத்தால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் எப்படி இருக்கின்றது என்பது ஒரு 'உலகம் அறியாத உண்மை!' அங்குள்ள மக்களுக்குத் தேவையான பொருட்கள் பட்டாளத்தின் பரிசோதனைக்குப் பின்பே போகின்றன. கிராமங்களுக்கு பற்றாி, யூரியா, பூச்சிமுட்டை என்பன தடை செய்யப்பட்டுள்ளன. புலிகளுக்கு இவை பயன்பட்டு விடும் என்பதே இதற்குக் காரணம் என்கிறது பட்டாளம். விவசாயத்திற்கு

இந்தப் புலி ஒழிப்பிற்குப் பெருமளவில் பலியாகின்றனர். ஏறத்தாழ கிராமத்திற்கு ஒரு முகாம் என்றளவில் மாவட்டம் முழுவதும் பட்டாளத்தினரும், விசேட அதிரடிப்படையினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

எந்தக் கிராமம் எப்போது சுற்றிவளைக்கப்படும் என்று யாருக்கும் தெரியாது. முதல் நாள் நள்ளிரவே கிராமத்தைச் சுற்றி வளைத்து பதுங்கியிருக்கும் பட்டாளத்தினர் காலையில் வயது வேறுபாடின்றி ஆண்கள், பெண்கள் அனைவரையும் திறந்த வெளியொன்றிற்கு அழைத்துச் சென்று சோதனை இடுகின்றனர். முன்னர் ஆண்களை மட்டுமே அழைத்துச் சென்ற பட்டாளத்தினர் இப்போது பெண்களையும் கைது செய்ய ஆரம்பித்துள்ளனர்.

## மட்டக்களப்பு ...

## பட்டாளத்தி...

கிழக்கில் பட்டாளத்தாரா...
பட்ட' பிரதேசங்களில் ...
நடைபெறுவதாகவும், ம...
றாடக் கடமைகளை மே...
யதாக நிலமை வழமைக்...
டதாகவும் அரசு அறிவி...

விடுவிக்கப்பட்ட பகுதி...
தினர் மக்களுக்கு வ...
மும், ஜனநாயகமும்எ...
என்பதைநிலைமைக...
வந்த சரிநிகர் செய்திய...
இங்கு விபரிக்கி...றன...

பாலியல் வன்முறை...
துன்புறுத்தல்,பாதுக...
கொலை. இவை தா...
ஆட்சியில் தமிழ் பே...
கப்படும் பரிசுகள் ...



## அரச படைகள் ...

**வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவு:...**

வாகரை,கதிரவெளி,மாங்கேணி,பனிச்சங்... கல்.

**ஓட்டமாவடி (முஸ்லீம்) உதவி அரச... பிரிவு:-**

ஓட்டமாவடி,வாழைச்சேனை,காகித ஆ... டவத்தமடு,வெலிக்கந்தை, நாவலடி.

**வாழைச்சேனை(தமிழ்) உதவி அரச... பிரிவு:-**

வாழைச்சேனை,கல்குடா,பாசிக்குடா,கும்... றக்கொண்டான் சேனை,புலிபாய்ந்த கல்,சு... குடும்பிமலை.

**செங்கலடி உதவி அரசாங்க அதிபர் பிரி...**

கொம்மாதுறை,(செங்கலடியில் இருந்து செ... வீதி முழுவதும்) தளவாய்,சவுக்கடி,ஆ... உன்னிச்சை,மரப்பாலம்

**ஏறாவூர் (முஸ்லீம்) உதவி அரசாங்க அ...**

ஏறாவூர்,மீராங்கேணி,மீச் நகர்.

**மட்டக்களப்பு உதவி அரசாங்க அதிபர் ...**

மயிலம்பாவெளி,சத்துருகொண்டான்,ஊற... ரம், மட்டக்களப்பு நகரம் முழுவதும், மு... மாங்கம்,கல்லடி,மஞ்சந்தொடுவாய்,பாலமீ... இருதயபுரம்,சின்ன ஊறணி,வளையிறவு.

நன்றி - நூலகத்திட்டம்

## மாவட்டத்தில்

## ன் ஆட்சி

ல 'விடுவிக்கப்
வில் நிர்வாகம்
கள் தமது அன்
கொள்ளக் கூடி
நத் திரும்பி விட்
து வருகிறது.

களில் பட்டாளத்
ங்குகிற சுதந்திர
வாறிருக்கின்றன
ள நேரில் பார்த்து
ளரின் தகவல்கள்

ித்திரவதை,கைது,
பின்மை, படு
பட்டாளத்தினரின்
ம் மக்களுக்கு வழங்
ாலும்.



சுற்றிவளைப்பின் போது கைது செய்வதற்கு முகமூடி நபர்கள் பயன்படுத்தப்படுவதும் உண்டு இந்த முகமூடி நபர்கள் தமிழ்க் குழு ஒன்றைச் சேர்ந்தவராகவோ, அல்லது பிடிபட்ட புலியாகவோ, அல்லது புலிகளுக்கு உதவியவராகவோ இருப்பார். அவர் ஒவ்வொரு சுற்றி வளைப்பின் போதும் யாராவது ஒரு சிலரைக் காட்டிக் கொடுக்க வேண்டும். அல்லது படையினரால் தாக்கப்படுவார். படையினரின் சித்திரவதைக்குப் பயந்து தனது தனிப்பட்ட எதிரிகளையோ அல்லது தனக்குத் தெரிந்தவர்களையோ காட்டிக் கொடுப்பதும் உண்டு.

கிராமங்களில் சுற்றி வளைப்பு மிகவும் ஆபத்தானது; நகரில் நடக்கும் சுற்றிவளைப்பை விட அபாயகரமானது. உயிருக்கு எந்த உத்தரவாதமுமில்லாத நடவடிக்கை அது. இச் சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட பலரது விபரங்கள் இன்று வரை தெரியாது. 'அவர்கள் அடிக்கிற அடிக்கும், சித்திரவதைக்கும்....இன்னொருக்கால் பிடிக்க வந்தால் ஓடிப்போய் புலியில் சேரத்தான் தோன்றும்' என்கிறார் மனம் புண்பட்ட வாலிபர் ஒருவர்.

கொண்டவர்கள் என்ற புலிகளின் சந்தேகத்திற்கு ஆளாகக் கூடும். இதைத் தவிர, ஊராரின் கண்களுக்கு முன் அவர்கள் வாழ்வதை விட இறப்பது நிம்மதியானதாக கருதப்படுகின்றது.

பட்டாளத்தால் கைதுசெய்யப்பட்ட தனது கணவரை விடுவிக்க தானும் சேர்ந்து முகாமுக்குள் நுழைந்த ஒரு பெண்ணின் கதையொன்றை விபரித்தார் ஒரு கிராமவாசி. ஒரு மாதகாலமளவில் உள்ளே வைத்திருந்த பின் விடுவிக்கப்பட்ட அப்பெண் சித்தப்பிரமை பிடித்தவராக இருக்கின்றார். இவருக்கு என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. வயதான அவரது பெற்றோர்கள் அவருக்கு மாந்திரீகர்கள் மூலம் பரிகாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்..... கணவர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை; அவருக்கு என்ன நடந்தது என்பதும் தெரியாது.

பெண்கள் மீதான பாலியல் வன்முறையுடனும், இளைஞர்கள் மீதான அடாவடித்தனத்துடனும் சேர்த்துப் பரவலாக இருவர் பெயர்கள் அடிபடுகின்றன. ஒருவர் புஹாரி என்பவர், மற்றவர் துரைக்குட்டி என்பவர்.

## பாலியல் வன்முறைகள்

சுற்றிவளைப்பின் போது அழைத்து வரப்படும் பெண்கள் முகமூடி நபர் முன்னால் அடையாளம் காணக் கொண்டு வரப்படுவர். கொண்டு வரப்பட்ட பெண்களில் யாராவது பட்டாளத்தாருக்கு தேவைப்பட்டால் அவர்கள் முகமூடிக்குச் சைகை கொடுப்பர். முகமூடி தலையாட்டும். அவ்வளவுதான் அப்பெண் 'புலி' என்ற சந்தேகத்தின் பேரில் இழுத்துச் செல்லப்படுவார்.

கொம்மாந்துறைவாசி ஒருவர் சொல்கிறார்; ''நான் கைது செய்யப்பட்ட போது என்னுடன் எனது ஊரைச் சேர்ந்த இளம் பெண் ஒருவரையும் கைது செய்தனர். முகாமின் பக்கத்து அறையில் இருந்து அலறல் வராத இரவுகளே இல்லை. மூன்று வாரத்தின் பின் விடுதலையான போது அவள் என்னிடம் சொன்னாள் 'இதற்குப் பிறகும் வாழத்தான் வேண்டுமா?' என்று''

பட்டாளத்தாருக்கு அவர்களது காமவெறியைத் தீர்ப்பதற்குப் பலியாகிப் போன பெண்களின் நிலைமை மிகவும் அபாயகரமானது. அவர்கள் வெளியே வந்தாலும், பட்டாளத்துடன் தொடர்பு

புஹாரி என்பவர் முன்பு புலிகளுடன் இருந்து பின்னர் பட்டாளத்துடன் சேர்ந்து கொண்டவர். கொம்மாந்துறை முகாமில் பட்டாளத்துடன் தங்கியிருக்கும் இவரது கையில் அகப்படுபவர்கள் தப்புவது அபூர்வம் என்று சொல்கிறார்கள். துரைக்குட்டி என்பவர் ரெலோ உறுப்பினர். கிராமத்தவர்களிடம் கப்பம் பறிப்பது முதல் பட்டாளத்தினரின் நடவடிக்கைகளுக்கு முன்னின்று உதவி செய்வதும், சித்திரவதைகளை, தாக்குதல்களை நடாத்துவதும் இவரது பணிகள் என்று கூறப்படுகின்றது.

## படுவான்கரையின் நிலை

கிழக்கு மாகாணத்தில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மட்டுமே அரச சார்பற்ற நிறுவனங்கள் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கிழக்குப் பிராந்திய இராணுவ அதிகாரி தெரிவித்திருக்கிறார். ஆனால் விடுவிக்கப்பட்ட பகுதிகள் மட்டுமல்ல விடுவிக்கப்படாத படுவான்கரைப் பகுதிக் கிராமங்களே உதவி வேண்டி நிற்கின்றன., அவர்களுடைய வயல்கள் விதைக்கப்படவில்லை, வயல்களில் வேலையும் இல்லை; அறுப்பும் இல்லை. வாவியிலோ, கடலிலோ மீன்பிடிக்கத்தடை. எந்த விதமான உழைப்புமில்லை, வருமானமுமில்லை. உணவுக்கே திண்டாட வேண்டிய நிலை.

பாலையடித்தோரை என்ற எழுவான்கரை கிராமத்தைச் சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத விவசாயி ஒருவர் படுவான்கரையில் வயல் விதைத்திருந்தார். ஆனால் அறுவடை செய்ய முடியவில்லை. பட்டாளத்தினர் அவரிடம் காணி உறுதி கேட்டனர். அவரிடம் உறுதி இருக்கவில்லை. விளைவு, பட்டாளத்தினர் அறுவடை செய்ய வேண்டிய நெல் வயலுக்குத் தீ வைத்து விட்டனர். இப்படி பட்டாளத்தினர் தீ வைத்த வயல்கள் ஏராளம்.

சில அரசசார்பற்ற நிறுவனங்கள் உணவுப் பொருட்கள், பால்மா போன்றவற்றை வழங்குகின்றன. இன்னும் சில கத்தோலிக்க நிறுவனங்களும் நிவாரண வழங்கலில் ஈடுபட்டுள்ளன. இதனூடாக கத்தோலிக்க நிறுவனங்கள் மக்களை கத்தோலிக்க மதத்திற்கு மாற்றுவதில் ஈடுபட்டு வருகின்றன என்ற குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக கத்தோலிக்க நிறுவன உறுப்பினர் ஒருவரைக் கேட்டபோது ''மக்கள் கர்த்தரை நாடி வருகிறார்கள்; நாங்கள் சேர்த்துக்-கொள்கிறோம்'' என்றார்.

## உங்கள் 'மோர்ஜ்' கூட

கிழக்கு மாகாணத்தில் எகெட், சீ.ஏ.ஏ, ஈ.ஆர்.ஓ, உட்பட மொத்தம் இருபதுக்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள்(N.G.O) புனருத்தாரண வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றன. இது தவிர ஐ.சி.ஆர்.சியும் புள்ளி விபரங்கள் திரட்டுவதில் ஈடுபட்டுள்ளது. இவையனைத்தும் பிரதானமாக மையங்கொண்டுள்ள பகுதி எழுவான்கரையே. படுவான்கரையில் இவை செயற்பட இராணுவம் அனுமதிப்பதில்லை. இவையனைத்தும் புனருத்தாரண நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபட்டு வருகின்றனவேயன்றி அங்குள்ள மக்களின் முக்கிய தேவையாகிய மனித உரிமைகள் பற்றி வாய் திறப்பதில்லை என்ற குற்றச்சாட்டுப் பரவலாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக பட்டாளத்தினரால் நடத்தப்படும் கட்டற்ற கைதுகள், சித்திரவதைகள் போன்றவற்றை எடுத்துக் கூறுவதற்கு அல்லது பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் பேசுவதற்கு யாரும் முன்வருவதில்லை.

அரசு விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள்,நிம்மதியாகவும்,பாதுகாப்பாகவும், இருக்கிறார்கள் என்று கூறி வருகின்ற போதும் உண்மை நிலை அதற்கு எதிரானதாகவே இருக்கிறது. சிவில் நிர்வாகம் உட்பட அனைத்துக்குமான அதிகாரம் படைத்த பிரிகேடியரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள 'விடுவிக்கப்பட்ட' பிரதேசங்களில் தங்களது நிலைமையை பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்ல எந்த வழியும் இல்லை.


முன்பு இந்தியப் படையினர் காலத்தில் மட்டக்களப்பு பிரஜைகள் குழு என்ற பெயரில் வண.சந்திரா பெர்ணான்டோவின் தலைமையில் இயங்கிய அமைப்பு அங்குள்ள மக்களின் மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்தது. 'தமிழ் விடுதலை வீரர்களினால்' அவர் கொல்லப்பட்ட பின் அவ்வப் போது முன்னாள் பா.உ.சாம் தம்பிமுத்து மனித உரிமைகள் பற்றிப் பேசிவந்தார். (அவரும் இந்தியப் படைகளின் மனித உரிமை மீறல்கள் பற்றிக் கண்டும் காணாதவராகவே இருந்தார் என்பது வேறு விடயம்.) அவரும் கொல்லப்பட்ட பின் இன்று தமது உரிமைகளுக்காக குரல் கொடுக்க யாரும் இல்லை என்ற ஆதங்கம் அங்கு நிலவுகிறது.

சரிநிகரிலிருந்து வந்திருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொண்டு எம்மைப் பார்த்து இவ்வாறு சீறினார் உணர்ச்சிவசப்பட்ட ஒருவர்; இப்ப எங்களுக்குத் தேவையானது நிவாரண வேலைகள் அல்ல. எமது உயிரை,மானத்தை,மனித உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஏதாவது செய்வதுதான். மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்ற கொழும்பிலுள்ள மனித உரிமைக்ள் நிறுவனங்கள் அனைத்தும் அரசு சொல்வதைக் கேட்டுக் கொண்டு பேசாதிருக்கின்றன. யு.என்.எச்.சி.ஆர் மட்டக்களப்பை எட்டிப்பார்த்து எத்தனை வருடங்களாகிறதோ தெரியவில்லை. ஏன் உங்கடை மோர்ஜ் கூட இந்தப்பக்கம் வருவதில்லைத்தானே. மட்டக்களப்பு மக்களது பிரச்சினைகள் பற்றி ஒரு பத்திரிகை அறிக்கையாவது விட்டிருக்கிறீர்களா? என்று கேட்டார் அவர்.

## முன்னாள் 'விடுதலை இயக்கங்கள்'

ரெலோ,புளொட, ஈ.பி.ஆர்.எல்.எப்,ஈரோஸ் என்று எல்லாத் தமிழ் குழுக்களும் நகருக்குள் அலுவலகங்களைத் திறந்து வைத்துக் கொண்டு தூங்கி வழிந்து கொண்டிருக்கின்றன. ரெலோ மட்டும் பட்டாளத்தினருடன் சேர்ந்து புலி ஒழிப்பில் ஈடுபட்டுள்ளது. இராணுவ முகாம்களுக்கு முன்னாலுள்ள 'சென்றி பொயின்ற்' அனேகமாக இவர்களுடையதாகத் தானிருக்கும். மக்களைக் காப்பதாகக் கூறிக்கொண்டு புறப்பட்டவர்கள் எப்படிப் பட்டாளத்தைப் பாதுகாப்பவர்களானார்கள் என்று யாரும் கேட்கமுடிவதில்லை. புலிகளுக்குப் போட்டியாக கப்பம் வாங்குவதே அவர்களது பிரதான இலக்கு. யாரும் கப்பம் தரமுடியாது என்று மறுத்து விடமுடியாது. மறுத்தால் அடுத்த சுற்றிவளைப்பின் போது அவர் புலியென்றோ,அல்லது புலி ஆதரவாளர் என்றோ குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுக் கொண்டு போகப்படுவார். தாக்குதலுக்கும் சித்திரவதைக்கும் உள்ளாக்கப்படுவார்.

ரெலோ உறுப்பினர் ஒருவரை முகாமிலிருந்து 200 யாருக்கப்பால் வைத்து புலிகள் ஒருமுறை சுட்டுக் கொன்றனர். இதற்கான தகவலை புலிகளுக்கு கொடுத்தார் என்ற பெயரில் கொம்மாந்துறையில் வைத்து 20வயது இளைஞர் ஒருவரை ரெலோயிஸ்டுகள் கைது செய்தனர். கைது செய்த இடத்திலேயே ரெலோயிஸ்ட்டுகள் தாக்கியதில் அவர் இறந்து விட்டார். மறுநாள் கொம்மாந்துறை இராணுவ முகாமுக்கு சற்றுத் தொலைவில் அந்த இளைஞரது சடலம் கிடந்தது கையில் ஒரு ரோச் பற்றறியுடன். பற்றறியுடன் ஓடியதில் பட்டாளத்தால் கொல்லப்பட்ட புலி என்று செய்தி பரப்பப்பட்டது.



## ...லை கொண்டுள்ள இடங்கள்:-

ி, வெரு
க அதிபர்
ுனானை,க
அதிபர்
மூலை,மு
மடு ஆறு,
ம் பதுளை
மலை ,
பிரிவு :-
:-
இருதயபு
வாரம்,மா
, கல்லடி,

**பட்டிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு:-**

கொக்கட்டிச்சோலை,அம்பிளாந்துறை,தாந்தாமலை, குடா.

**வவுணதீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு:-**

வவுணதீவு,வலையிறவு,நாவற்காடு,ஈச்சந்தீவு.

**வெல்லாவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவு:-**

பழுகாமம்,பெரிய போராதீவு,பாலையடி வெட்டை,14,15,16ம் கொலணி, வெல்லாவெளி

**மண்முனைப் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவு:-**

ஆரையம்பதி,பாலமுனை,காங்கேயன் ஓடை, மண்முனை,தாளங்குடா.

**காத்தான்குடி:-**

காத்தான்குடி

**மண்முனை தென் எருவில் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவு:-**


கல்லாறு,துறைநீலாவனை,ஒந்தாச்சி மடம்,செட்டிபாளையம்,களுவாஞ்சிக்குடி,பட்டிருப்பு,குறுமண்வெளி.


நன்றி - நூலகத்திட்டம்



# மறையாத மறுபாதி:
# புகலிடங்களில்
# பெண்ணிலைவாத எழுச்சி

மல்லிகா சிவகடாட்சரம் எம்.ஏ.






2

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மறையாத மறுபாதி- பெயரிலேயே ஒரு உரிமைப் பிரகடனம் ஒலிக்கிறது. மனுக்குலத்தின் மறைக்கப்பட முடியாத, மறைய மறுக்கின்ற பெண்களது இருப்பை வலியுறுத்திக் கொண்டு எம்முன் நிற்கிறது இக் கவிதைத் தொகுதி.

இத் தொகுதியில் காணப்படும் சமூக அரசியல் விமர்சனமும், பெண்களின் பார்வையூடாகவும், அனுபவங்களினூடாகவும் அதனை வெளிப்படுத்தலும் மிக முக்கியமானவையாகும். இச் சமூக, அரசியல் விமர்சனமானது நிறவாதம், பால்வாதம், அரசியல் வன்முறை. ஆகியவை பற்றிய துணிச்சலான காத்திரமான வினாக்களை எழுப்புகிறது. இவ்விமர்சனமே இத் தொகுதியின் பொருள் அமைவு ஆகும். அத்துடன் பொருந்தாததை, ஒடுக்குமுறை சார்ந்ததை நிராகரிப்பதும் இவ்விமர்சனத்தின் இன்னோர் முக்கிய அம்சமாகும்.

சமூகத்தில் நிலவும் பால் அசமத்துவம், ஆணாதிக்கம் ஆகியவற்றின் ஒரு வெளிப்பாடே சீதன முறையாகும். 'சமூகத் தீமை' என்ற வகையில் இலக்கியத்தில் சீதனக் கொடுமை பேசிய கவிதைகளும் தமிழில் நாவல்களும், சிறுகதைகளும் ஏராளம். மீண்டும் மீண்டும் பேசப்பட்டதால் அலுப்பையே ஏற்படுத்திவிட்டது இந்த விடயம். பொதுவாக சீதனத் தீயால் கருகும் பெண் மலர்கள் என்றும் 'மீட்டப்படாமல் உறங்கும் வீணைகள்' எனவும் 'சீதன இருளால் மலர முடியாமற் துடிக்கும் மொட்டுகள்' என்ற வகையிலும் பெண்ணை இரக்கத்துக்குரியவளாகவே இதுவரை காலமும் சீர்திருத்த இலக்கியங்கள் சித்திரித்தன.

மறையாத மறுபாதியில் சில கவிதைகள் சீதனம் பற்றிப் பேசுகின்றன; ஆனால் புதிய பார்வை; புதிய குரல்; சீதனம் எப்போது ஒழியும் என்று இரங்கும் குரல் அல்ல. அதனைத் தூக்கி எறிந்து நிராகரித்து விடுதலை இக் கவிதைகள் காட்டுகின்றன. மாப்பிள்ளைக்கு வந்தனங்கள் என்ற கவிதையில் நிருபா, மாப்பிள்ளையைத் தன்னுடன் வாதாட அழைத்து, தனது கருத்தைக் கூறி பின்னர் அவரை நிராகரித்து விடுகிறார்.

**''வாருங்கள் மாப்பிள்ளையே**<br>
**நம் வருங்கால வாழ்வு பற்றி**<br>
**வாதிடுவோம்**<br>
**மனங்கள் இணையும்**<br>
**திருமணம் இல்லை இது**<br>
**நிச்சயம்**<br>
**உமது**<br>
**பந்தங்களெல்லாம்**<br>
**பணங்களோடு தானே**<br>
**கொடுத்தவற்றை**<br>
**எடுத்துக் கொள்ள மாட்டேன்**<br>
**விலைப்பட்டவரே விலகிச்**<br>
**சென்றுவிடும்''**

லட்சங்களுக்காக லட்சியங்களை அவமதிக்கும் ஆடவர்க்கு எதிராக ஓர் உடன்படிக்கை செய்ய வேண்டும் எனக் கூறும் கருணா சீதனத்துடன் இரண்டறப் பிணைந்திருக்கும் இன்றைய திருமண முறையையும் ஒதுக்கி விடுகிறார்.

**''சீதனம் கேட்டவரை**<br>
**சீ .... என்று விரட்டிடுங்கள்**<br>
**மணம் இல்லாவிட்டாலென்ன**<br>
**மாய்ந்து விட மாட்டோம் நாம்''**

பாமினியின் 'விற்பனை' என்ற கவிதை சீதன முறையையும் சீதனம் கேட்கும் ஆண்களையும் கிண்டல் செய்கிறது.

**மாப்பிள்ளை வாங்கலியோ**<br>
**மாப்பிள்ளை வாங்கலியோ**<br>
**கடல் கடந்தவர்கள்**<br>
**கழித்த காலங்களுக்கும்**<br>
**தரித்த வேடங்களுக்கும்**<br>
**விதவிதமான விலைகள்**<br>
**மாப்பிள்ளை வாங்கலியோ**

முகம் சிவக்க வைக்கும்,<br>
தலை குனிய வைக்கும் எள்ளல்.

இவ் வகையில் இக் கவிதைகள் பாரம்பரியமான திருமண முறையை நிராகரித்து 'விவாகரத்து' செய்து விடுவதையும் காணலாம்.

ஆணாதிக்கத்தின் வெளிப்புற ஒடுக்குமுறையால் பெண்கள் துன்புறுவது ஒரு புறமிருக்க பெண்களே இந்த ஒடுக்கு முறை அம்சங்களைத் தம்மகப்படுத்தி வைத்திருத்தல் பெண்நிலைவாதம் எதிர் கொள்ளும் இன்னோர் முக்கிய பிரச்சினையாகும். ஒடுக்கு முறையைத் தம்மகப்படுத்தியிருக்கும் நிலையிலிருந்து பெண்கள் விழிப்படைய வேண்டும். இது பெண்களிடையே மாத்திரமல்ல சாதி ஒடுக்கு முறை காலனித்துவ ஒடுக்கு முறையிலும் காணப்படும் நிலைமை. இதற்கு ஆழமான அரசியல், உளவியல் பின்னணி உண்டு. இந் நிலைமையையும் இத் தொகுதியின் சில கவிதைகள் அடையாளம் காட்டுகின்றன. பிரிய தர்சினியின் 'சுவடுகளின் தொடக்கம்', மைத்ரேயியின் 'நாமும் மனிதராய்' முதலியவற்றைக் குறிப்பிடலாம். 'சுவடுகளின் தொடக்கம்' நேரடியாக இப் பிரச்சினை பற்றிக் கூறுகிறது. மைத்ரேயி ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை உருவாக்கி இக் கருத்துக்குக் கவிதா வடிவம் தருகிறார். 'மனக் கைதியாக' இருப்பது பற்றி மாத்திரமல்லாமல் திறந்த மனதுடன் புதியவற்றையும் சிறந்தவற்றையும் உள்வாங்குதல் பற்றிப் பேசுகிறார். உடையில் மாத்திரம் ஸ்கண்டிநேவிய நாகரீகத்தைப் பின்பற்றும் மேம்போக்கான மாற்றத்தை அந் நாகரீகத்தின் வளமான அம்சங்களைப் பார்க்கவும், அதிலிருந்து கற்றுக் கொள்ளவும் மறுக்கும் 'மூடுண்ட மனோபாவம்' பற்றியும் பேசுகிறார்.

**''ஸ்கண்டிநேவியப் பெண்களிட**<br>
**மிருந்து**<br>
**புற நாகரீகத்தை மட்டுமல்ல**<br>
**உன்னை நீயே இழிவுபடுத்தா**<br>
**திருக்கவும்**<br>
**இழிவுபடுத்துவோரைப்**<br>
**புழுவென**<br>
**ஒதுக்குவதையும்**<br>
**உன் உரிமைகளை பூரணமாக**<br>
**உணருவதையும்**<br>
**அவற்றை மறுப்பவர்களுடன்**<br>
**போராடுவதையும்**<br>
**கூடவே கற்றுக் கொள்**<br>
**................**<br>
**இல்லாவிடில்**<br>
**மனிதராய் அன்றி 'ஐஸாய்'**<br>
**உறைந்து போவாய்**<br>
**எந்த நவநாகரீக ஆடையும்**<br>
**உன்னை**<br>
**வெப்பமூட்டி**<br>
**மனிதராக்கா**

புலம் பெயர் சமூகம் மேற்கு ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் எதிர் கொள்கின்ற 'அகதி வாழ்வின்' அவலங்கள், அவற்றுக்கு அடிப்படையான நிற வாதம் பற்றியும் இப் பெண்கவிஞர்கள் எடுத்துக் கூறுகின்றனர். இந் நிலைமை ஏற்படுத்தும் கழிவிரக்கம், மனத்துயரம் முதலியவற்றை இக் கவிதைகள் காட்டுகின்றன. பெண்ணாக அகதி, அப்பிள் மரத்தடியில் மாங்காய்களைத் தேடி போன்றவை உதாரணங்கள். பெண்ணாக அகதி என்கிற கவிதை நிற வாதத்தையும் பால் வாதத்தையும் ஒன்றாக எதிர்கொள்கிற இரட்டை ஒடுக்குமுறை அனுபத்தைப் பேசுகிறது.

பெண்நிலை வாதம் பெண்களுக்கு எதிரான ஒடுக்கு முறையை மாத்திரமன்றி, சமூகத்தில் காணப்படும் சகலவிதமான ஒடுக்கு முறைகள் பற்றியுமே அக்கறை கொள்கிறது. அவ் வகையில் ஒடுக்கு முறையின் ஒரு முக்கிய அம்சமாக உள்ள வன்முறையைக் கண்டிக்கிறது. வன்முறை ஆயுதக் கலாசாரத்தை விமர்சிப்பதும் கண்டிப்பதும் உலகெங்குமுள்ள பெண்நிலை இயக்கங்களின் பொதுப் போக்கு எனலாம். எமது புகலிடத்துப் பெண்களும் உலகெங்கிலும் நடக்கும் போர்கள் பற்றியும், அழிவு பற்றியும், இலங்கையில் நடக்கும் யுத்தம் பற்றியும், தேசிய விடுதலைப் போராட்டம் போட்டி அரசியலாய்ச் சீரழிந்து, இராணுவவாதமாய் மாறியமை பற்றியும் பேசுகின்றனர். பேராசையினாலன்றோ யுத்தம், தர்பாரின் தகர்வு, நெருடல் ஆகிய கவிதைகள் இவற்றுக்கு உதாரணங்களாகும்.

**மண்ணிற்காகவும்**<br>
**மண்ணெண்ணெய்க்காகவும்**<br>
**மோதல்**<br>
**இனத்தின், மதத்தின், நிறத்தின்**<br>
**பெயரால்**<br>
**. . . . . . . . . .**<br>
**ஒவ்வொரு பிள்ளையின்**<br>
**நரம்பிலும் ஓடுவது**<br>
**பெண்களின் இரத்தம்**<br>
**எனவே, நான் சொல்கிறேன்**<br>
**யுத்தங்களை நிறுத்துங்கள்**<br>
**ஒரு தாயாகவும் பெண்ணாகவும்**<br>
**இனியும் பொறுக்க முடிய**<br>
**வில்லை என்னால்**

இது மல்லிகாவின் கட்டளையாகும்.

மொத்தத்தில் இக் கவிதைத் தொகுதி பெண்களது பல பிரச்சினைகளையும், அவர்களது பார்வைகளையும் திரண்ட வடிவில் தருகின்றது. பதிப்பாசிரியர் கூறுவது போல '' ... ஒரு சமூகத்தின் சுற்றுச் சூழலோடு விலங்குகளைப் போல கலாசார விலங்குகளைச் சுமந்து வந்த பெண்கள் அவற்றைக் கழற்றி எறிய முனைவதை (இத் தொகுதியில்) காணலாம்''

இவ் வகையில் தமிழ் இலக்கிய உலகின் எதிர்ப்பு இலக்கிய (Resistance - literature) மரபிற்கு புதிய பரிமாணத்தையும் இத் தொகுதி அளிக்கிறது. இலங்கைத் தமிழ்ப் பெண்களிடையே பெண்நிலைச் செயல் வாதம் சற்றுத் தேக்கமடைந்துள்ள இக் காலகட்டத்தில் புலம் பெயர்ந்த சகோதரிகளிடமிருந்து வெளிவந்துள்ள இக் கவிதைத் தொகுதி தெம்பு தருகிறது.

## எனது .....

**● 'இலங்கை அரசு ஜனாதிபதி தேர்தல், விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் என்பவற்றில் மாற்றங்களை கொண்டு வருவதற்கு அண்மைக்காலமாக முயற்சி செய்து வருகின்றது. இம்முயற்சிகள் மலையக மக்களில் எந்தவிதமான தாக்கங்களை ஏற்படுத்தும் எனக் கருதுகின்றீர்கள்?**

கடந்த தேர்தல்களில், மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகமான அங்கத்தவர்கள் தெரிவானதே இத்தகைய மாற்றத்தை கொண்டு வர அரசாங்கம் அவசரப்படுத்துவதற்கான காரணமென சுட்டிக் காட்டப் படுகிறது.
புதிய திட்டத்தின் மூலம் மலையக மக்களின் அரசியல் வாய்ப்புக்கள் பறிக்கப்படும். இதன் பாரதூரத்தை மக்களிடமிருந்து மூடி மறைப்பதற்கு மேலும் சில மலையக 'தலைவர்களுக்கு' அமைச்சர் பதவி பரிசாக தரப்படலாம்.
ஆனால் இத்தகைய நடவடிக்கைகள் மலையக மக்களின் அரசியல் சிந்தனையை கூர்மைப்படுத்தி அரசியல் விழிப்புணர்ச்சிக்கு தூண்டுகோலாக அமைந்து விடும் என்றே எதிர்ப்பார்க்கின்றோம்.

**● தற்போது நடைமுறையிலிருக்கும் மாகாண சபைகள் மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உதவும் என நீங்கள் கருதுகிறீர்களா?**


மலையக மக்களின் பிரச்சினை மாகாணசபையால் தீர்க்கப்படக் கூடியது என நாம் கருதவில்லை. ஆனால் எமது கருத்தை வலியுறுத்துவதற்கான மேடையாக இதனை ஆக்கிக் கொள்ளலாம். எமது அரசியல் கோரிக்கைகளுக்கு மக்கள் மத்தியில் திரண்டுவரும் ஆதரவை வெளிப்படுத்தவே தேர்தல்களை நாம் பயன்படுத்துகின்றோம்.

**● நுவரெலியா மாவட்டத்திலிருந்து குறிப்பாக மஸ்கெலியா பகுதியிலிருந்து கந்தளாய், தெனியாய போன்ற பகுதிகளுக்கு மலையகத் தோட்டத் தொழிலாளர்களை இடம் பெயரச் செய்யும் போக்கு அண்மைக் காலமாக நடைபெற்று வருகின்றது. இந்நடவடிக்கை மலையக மக்களின் செறிவை குறைப்பதற்கான நடவடிக்கை எனக் கருதலாமா? என்ன கூறுவீர்கள்?**

சந்தேகமேயில்லை. இப்போக்கு எதிர்காலத்தில் இன்னும் பரவலாக மேற்கொள்ளப்படும் என்றே நினைக்கின்றேன். தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்டதின் உடனடி பின்விளைவுகளுக்கு உதாரணமாய் இவைகள் ஆகியிருக்கின்றன. குடியேற்றங்கள் ஒரு இனத்தின் பாதுகாப்புக்கும் தனித்துவத்திற்கும் எவ்வாறு சவாலாகிப் போய்விடுமோ, அதை விட மோசமான நிலை இந்த இடம்பெயர்வுகளினால் ஏற்பட்டே தீரும். காரணம், குடியேற்றங்களின் போது அதன் பாதிப்புக்களை சுட்டிக் காட்டி உறுதியாக குரல் கொடுக்கும் வலிமையாவது அப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக வாழும் மக்களுக்கு இருக்கும். ஆனால் இத்தகைய இடம் பெயர்வின் போது மக்கள் உணர்ச்சியற்ற ஜடமாகவே அங்கு போய்ச் சேர்கிறார்கள். தமக்கெதிரான கொடுமைகளை எதிர்த்து குரல் கொடுக்கக் கூட சக்தியற்ற அடிமைகளாக இவர்கள் ஆக்கப்படுவார்கள். இதுதான் சரித்திரம் காட்டும் உண்மை.
எப்போதாவது அவர்களுக்கு அங்கே பாதுகாப்பில்லை என்ற நிலை ஏற்பட்டால் அகதிகளாகக் கூட தமது பழைய பிரதேசங்களுக்கு பாதுகாப்புத் தேடி ஓடி வர முடியாத நிலையே உருவாகும். இது எமது சமூகத்தின் சக்தியை நிர்மூலமாக்கும் நடவடிக்கையின் இன்னொரு தொடக்கமாகும்.

நன்றி - நூலகத்திட்டம்






## 3

மனோகரமான காலம் என்று அதனைச் சொல்லலாம். குளிர்ந்த காற்று வீசுவதைப்போல, மழை பெய்வதைப் போல ஒரு சிட்டுக் குருவியாக சுபா வருகை புரிந்தாள். பூப்பூவாகச் சிரித்தாள். அவள் வந்த போது இவ்வளவு அனுபவத்தைத் தருவாள் என்று எதிர் பார்க்கவில்லை. தனுவைப் போல வாசுகியைப் போல, சியாவைப் போல, ரூபியைப் போல சாதாரணமான ஒருத்தியாகத்தான் அவள் வந்தாள். வயல் சூழ்ந்த கிராமத்திலிருந்து வந்தாள். குளம் நிறைந்த ஒரு கிராமத்திலிருந்து வந்தாள்.தென்னைகள் நிமிர்ந்த ஒரு வளவின் வீட்டிலிருந்து அவள் புறப்பட்டாள். மாலைகளில் குடத்தில் நீர் சுமப்பாள். பொழுதுபட விளக்கேற்றி விபூதி பூசிப் பால் தேனீர் அருந்திப் பின் படிப்பாள். சில சமயம், பிட்டு அவிக்கத் தேங்காய் துருவித் தருவாள். இடியப்பம் பிழிந்து கொடுப்பாள். பாற் சொதி வைப்பாள்.

இங்கு மகிழ்ச்சியை நிறைக்க வந்திருக்கிறாள். ஆனந்தம் தர வந்திருக்கிறாள். தன் எளிமையான, மென்மையான அழகை இங்கு பரப்ப வந்திருக்கிறாள். இனிமையாகச் சொல்லாட அவள் வந்தாள்;

பெரிதாகச் சொல்ல ஒன்றுமில்லை. அவனுக்கு அவளை மிகவும் பிடித்திருந்தது.என்ன காரணம்?.

ஒரு முறை கையைப் பிடித்து சாத்திரம் பார்த்தாள். இனிமையான சுகந்தம் வீசியது. ''எனக்கு உதிலை நம்பிக்கை இல்லை.''என்றான். ''நான் நம்பிறன் விடுங்கோவன்'' என்றாள். ''நல்லாய் படிப்பியள். கெட்டிக்காரன். அஞ்சு பிள்ளைகள். (இந்த இடத்தில் சிரித்தாள். இவன் வெட்கப்பட்டான்). கலியாணம். ம்.. உங்களோடை படிக்கிற பிள்ளைதான். காதல் கலியாணம். இடையில் கொஞ்சம் பிரச்சினை வரும். (இதில் நமட்டுச் சிரிப்பு) அந்தப் பிள்ளை உங்களைவிட கொஞ்சம் கெட்டிக்காரி...'' கையை உதறி விட்டு, ''உங்கன்ரை சாத்திரமும் நீங்களும்...'' என்று எழுந்தான். அவள் இன்னும் சிரித்தாள்.

மறையும் சூரியனின் கதிர்கள் சூழலை மஞ்சளாக்கிய ஒரு மாலைப் பொழுது. இவன் வழக்கம் போல கன்ரீனில் கும்மாளமடித்தான். ''நேரமாச்சு...'' என்று புறப்பட்டான். தூரத்தில் லைபிறரியிலிருந்து தனுவும், தயாவும், சுபாவும் வருவது தெரிந்தது. அவர்கள் பின்னே சூரியன். அவர்கள் குழல் கற்றைகள் மஞ்சளாக மினுங்கியது. இவன் நின்றான். ''என்ன படிப்போ''? என்றான். லேசான நக்கல் தொனி இருந்திருக்க வேண்டும். ''நாங்கள் இப்ப நோட்ஸ் எடுத்தாத் தானே ரெஸ்ற்றுக்கை வந்து பறிப்பியள்...'' என்றாள் தனு. ''நாங்கள் வாறம் சுபா. உனக்கு துணை கிடைச்சிட்டுது தானே?'' என்றாள்.''இவளைக் கவனமாக பார்ப்பியள் தானே'' என்றாள் தனு. லேசான புன்சிரிப்புடன் அவர்கள் சென்றனர். இவள் வெட்கப்பட்டு அருகில் ஒடுங்கினாள். ''என்ன படிச்சியள்?''என்று கேட்டான் இவன்.

இவனும் உதயனும் தவறுதலாக ஒருமுறை லைபிறரிக்குள் போனார்கள். சுபாவும் வாசுகியும் இருந்தனர்.(இருப்பது தெரிந்துதான் போயினரோ?) முன் கதிரைகளைக் காட்டி ''இதில் இருக்கலாம்'' என்று கண்ணால் சொன்னாள் சுபா. ''மழை வருமாப் போல...'' என்றாள் வாசுகி. இரண்டு புத்தகங்கள் எடுத்து தந்தாள் சுபா. ''இது பெரிய அறுவை '' என்று முணுமுணுத்து சுற்றுமுற்றும் பார்த்தான் இவன். சுபா சிறிது நேரத்தில் சின்னத் துண்டு தந்தாள். ''நீங்கள் நன்றாகப் படிக்க வேண்டும். நேரத்தை வீணாக்காது தயவு செய்து படியுங்கள். பால் வாங்கித் தரலாம்''. அன்று அவனும் உதயனும் பால் குடிக்கவில்லை.

''உங்கன்ரை பிரெண்ட் ஆரையும் காதலிக்கிறாரோ? '' என்று உதயனிடம் கேட்டாள் சுபா. ''சீ.. ஏன் கேட்கிறியள்?'' என்றான் உதயன். ''சும்மா'' என்றாள் சுபா.
''என்ன ரண்டு பேரும் நீலத்திலை உடுப்பு... ரண்டு பேரும் நல்ல பொருத்தம்... என்று வாசுகி சொன்னாள். சுபா வெட்கப்பட்டாள். இவன் சிரித்தான்.

சுபா பரமேஸ்வரன் ஆலயத்திற்கு போய்விட்டு வந்தாள். ''உங்களை எங்கையெல்லாம் தேடுறது... இந்தாங்கோ இதைப் பூசுங்கோ '' சுபாவின் நெற்றியில் வீபூதியும் சந்தனமும் இருந்தன. ''எனக்கு உதிலை நம்பிக்கை இல்லை...'' என்றான். ''உங்களுக்கும் சேர்த்துத்தான் கும்பிட்டனான் எனக்காகப் பூசுங்கோ..'' என்றாள்.
''அண்டைக்கும் பால் வாங்கித் தரேல்லை. இண்டைக்கு வாங்கோ குடிப்பம்...''என்று அழைத்தாள் சுபா. ''நீங்கள் என்ரை சொல்லை மதிக்கேல்லை. நான் உங்களை மதிக்கிறன்'' என்றாள் சுபா.
ஒரு முறை ரூமிற்கு வரச் சொல்லியிருந்தாள். பரீட்சைக்குச் சமீபத்தில், ஒரு நோட்ஸ் தேவையிருக்க, இவனும் உதயனும் சுபாவின் ஞாபகம் வரப் போனார்கள். ''வாங்கோ'' என்றாள்.'' எப்படி ரூம் கண்டுபிடிச்சியள்? என்று வியந்தாள். ''உங்கள் கால் பட்டதில் இந்த ரூம் ஜென்ம சாபல்யம் அடைந்தது...'' என்று நக்கலடித்தாள். அதிகமாகப் புளகித்தாள். ''ஒரு நிமிஷம்'' என்று உள்ளே போய் இரண்டு நிமிஷத்தில் 'ரீ' கொண்டு வந்தாள். தலைமயிரை கொண்டை போட்டிருந்தாள். எளிமையான உடையில் அழகாக இருந்தாள். மிக மென்மையாக, ஆசையாகக் கதைத்தாள். ரீ நன்றாக இருந்தது. அந்தக் கணத்தில் அவளால் இவன் அதிகம் பாதிப்படைந்திருந்தான். ''போப்போறம்'' என்ற போது வாசல்வரை வந்து வழியனுப்பி தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருந்தாள். 'இவள் என் மனைவியாக வாய்த்தால்... '' என்று அப்பொழுதுதான், அப்பொழுதே தான் முதல்முறையாக யோசித்தான். நடந்தவைகளை யோசித்துப் பார்த்தான். அன்றிரா படிக்க முடியாதிருந்தது. ''நீ சுபாவைப் பற்றி என்ன நினைக்கிறாய்?'' என்று உதயனிடம் கேட்டான். ''அவள் உன்னை நல்லா விரும்புகிறாள் போல...'' என்று எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தான் உதயன்.

பிறகு சுபாவைப் பார்க்க ஒரு மாதிரியாக இருந்தது. அவள் சிட்டுக் குருவியைப் போலத் தான் உற்சாகமாக வந்தாள். ''என்ன ஒரு மாதிரி'' என்றாள். ''அதெல்லாம் பயப்பிட ஒன்றுமில்லை. நீங்கள் பாஸ் பண்ணுவியள்'' என்றாள்.

பரீட்சை முடிந்து விடுமுறை விட்டதன் பிறகு சுபாவைச் சந்திக்க முடியவில்லை. அந்த விடுமுறைக்குள் வந்த யூலை இனக் கலவரம் அதிகம் அரசியல் வேலைக்குத்தான் தூண்டியது. எனினும் ஓரத்திலிருந்து கண்சிமிட்டிக் கொண்டிருந்தாள் சுபா.

சோளகம் தணிந்து போய் வீச, யன்னலுக்கூடாகப் பால் நட்சத்திரங்கள் தெரிந்த ஒரு சாமத்தில் முழிப்புத் தட்டிய போது சுபாவை யோசித்தான். மூன்று தரம் மணி அடித்தது. புரண்டு படுத்தான். கம்பஸ் தொடங்க சுபாவிடம் என் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று அன்றிரா உறுதியாக முடிவெடுத்தான்.

கம்பஸ் திறந்த போது சுபா உடம்பு வைத்து இன்னும் கொஞ்சம் வெள்ளையாக வந்தாள். '' கொஞ்சம் வெள்ளையாக இருக்கிறியள்'' என்றான். செம்மையாகச் சிரித்தாள். ''ஒரு விஷயம் உறுத்திக் கொண்டிருந்தது. உங்களோடை கதைக்க வேணும்'' என்றான். ''என்ன,என்ன? '' என்றாள். ''கதைக்கிறன்'' என்றான். நிமிர்ந்தான்; நேராக நடந்தான்.

இரண்டு மூன்று நாட்களுக்குள்ளேயே கதைத்தான். இராமநாதன் மண்டபத்து ஒரு அறையில் லெக்சர் முடிந்து ஓய்ந்திருந்த ஒரு மாலைப் பொழுதில் நேரிடையாகவே கதைத்தான். '' நான் உங்களை நல்லா விரும்பிறன். கோபிக்காதையுங்கோ. உங்களுக்கு விருப்பமில்லாட்டில் பயப்பிடாமல் சொல்லுங்கோ. கோபிக்க மாட்டன். ப்ளீஸ் என்னைப் புரிஞ்சு கொள்ளுங்கோ. விருப்பமில்லாட்டியும் இப்படியே நாங்கள் தொடர்ந்து இருக்கலாம். என்ன கதைக்கிறதெண்டே தெரியேல்லை. என்ரை விருப்பத்தைச் சொன்னனான். உங்களுக்கு வேறை விருப்பம் இருக்கலாம். முடிவை யோசித்து ஆறுதலாகச் சொல்லுங்கோ...''
அவள் மெளனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். இனிக் கதைக்க ஒன்றுமில்லை. அவள் முகம் கறுத்து இருந்தது. கண் கலங்கி வருமாப் போல தெரிந்தது. முகம் வியர்த்து இருந்தாள். ''நான் உங்களை நல்லாய் விரும்பறன்''..''என்றாள். ஒரு வார்த்தை தான் சொன்னாள்.
இவன் ஓடிப் போய் உதயனிடம் சொன்னான். சுபாவை அடிக்கடி சந்திக்கிற போது இவள் சிட்டுக் குருவியா எனத் திகைத்துப் போயிருக்கிறான். என்ன உற்சாகமாக இருக்கிறாள். என்ன சந்தோஷமாக இருக்கிறாள். சிட்டுக் குருவியாக நெஞ்சில் அடைக்கலம் புகுந்தாள், அவள்.

சந்தோஷம், சந்தோஷமாக இருந்தது. சைக்கிள் உற்சாகத்துடன் துள்ளிக் குதித்தது. பனிப்புகாருடனான விடியல் குதூகலத்தைக் கொடுத்தது. மாலையில் தனிமை வாட்டியது. நண்பர்களுடனான அரட்டை அறுவையாக இருந்தது.
உனது குதூகலமே எனக்கு அளவற்ற சந்தோஷத்தைத் தருகிறது. சிரித்தபடி இரு. உனது சோர்வு கூட என்னுள் அயர்ச்சியைத் தரும். நான் உன்னை மிகுந்தபடி நேசிக்கிறேன். நீ எனக்கு வசந்தமாக இரு. நீ எனக்கு சுகந்தமாக இரு. கோடை காலங்களில் காற்றாகவும், மழைக்காலங்களில் போர்வையாகவும் இரு. அளவற்றபடி உன்னை நான் நேசிக்கிறேன் என்பதை எப்படி நான் புரிய வைக்க? மலர்ச்சியாக இரு என்பதை மட்டுமே எனக்குத் திரும்ப சொல்லத் தெரிகிறது. பூ எப்போ மலரும்? பொழுது எப்போ விடியும்?
''உங்கன்ரை ரூமிற்கு வந்து உங்களைப் பார்க்க வேணும் போலை... எப்படி நித்திரை கொள்ளுவியள்... எப்படி பிரஸ் பண்ணுறியள் .. ஷேவ் எடுக்கிறியள், எப்படிக் குளிக்கிறியள்.. எப்படி,எப்படி?... வந்து ஒளிச்சு நிண்டு பார்க்க வேணும் போலை கிடக்கு...'' என்று முகத்தை மலர்த்திச் சொன்னாள்.இவன் நித்திரை கொள்ளும் போது கனவுகளில் லயித்தான். வாயில் நுரை ததும்ப பிரஸ் பண்ணும்போது சந்தோஷம் குமிழியிட இருந்தான். ஷேவ் செய்யும் போது வரும் எரிவையும், எரிச்சலையும் சற்று நேரத்திற்கு மறந்தான். ஷவரிலிருந்து நீர் சுரீரென தலையில் இறங்கும் போது, புத்துணர்ச்சியுடன் ஆனந்தப்பட்டான்.

''மீசையை உங்களுக்கு ஒழுங்கு படுத்தத் தெரியாதா?'' என்று கேட்டாள். இரகசியமாக ஒரு முறை கத்தரிக்கோல் கொண்டு வந்து மீசையைக் கத்தரித்து ஒழுங்குபடுத்தினாள். கன்னத்தைப் பிடித்து மீசையைக் சீராக்கினாள். இவன் சடக்கென்று முகத்தை இழுத்து முத்தமிட்டான். முகம் சிவந்தாள்.

முதன் முதலில் முத்தமிட்டது அவள் கைகளில் தான். எல்லோரிற்கும் காதலிக்குக் கொடுத்த முதல் முத்தத்தின் ஞாபகத்தைப் போலவே அவனும் அதனை நினைவு கூர்ந்தான். சுபாவின் மோதிரத்தை வைத்துக் கொண்டு ''கையைத் தாங்கோ நான் போடுறன்'' என்றான். கை மென்மையாக, பஞ்சு போல, குளிர்மையாக இருந்தது. எடுத்து உள்ளங்கையில் முத்தமிட்டான்.ஒரு ரோஜாப் பூவை முகர்ந்தது போல.

(வரும்)

## கதிரையில் வந்தமர்ந்த பூமரம்

பூமரம், வந்தமர்ந்தது கதிரையில்
தன் குறையைச் சொன்னது;
மழை இல்லை
முகில்கள் கருகிச் சாம்பல் பறக்கிறது
இந்த நிலைக்குள்ளே
கன்னி கட்டுவது எப்படி
உங்கள் மூக்கில்
இனிக்கின்ற வாசம்
உற்பத்தி செய்வது சிரமமே!

எழுந்து அசைந்து இருந்தது ஒருதரம்
பூமரம்.
நான் குடிக்கக் கொடுத்த தண்ணீரைக்கூட
அன்று அது மறுத்தது.
முன்பு வருகின்ற வண்ணத்துப் பூச்சிகள்
கோடையில் கருகிநான்
மெலிந்த பிற்பாடு
வருவதில்லையே என்று சொன்னதும்
அதன் கணகளில்
நீர் சுரத்தது.

பருகுக என்று நான்
கோப்பியைக் கொடுத்தேன்.
இரண்டு கையாலும் வாங்கிய பூமரம்;
இந்த நிலையிலும் காகங்கள் வந்து
எனது கிளைகளில்
குந்திக் கழிப்பதும்,
செத்த இலைகளை
கொத்திவிடுவதும்,
பெரிய வருத்தமே!

பூமரம் கோப்பியைப் பருகவே இல்லை
சொல்லிச் சொல்லியே
கதிரையைச் சுரண்டி சுரண்டி இருந்தது.

-சோலைக்கிளி
16.6.93

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத் தமிழ் மக்களது பிரச்சினைக்கான தீர்வுஎன்ன?

மலையகத் தமிழர் தனியொரு தேசிய இனத்தவரா என்ற கேள்வியும் மலையகத் தமிழர் என்ற சொற்றொடர் யாரைக் குறிக்கிறது என்ற கேள்வியும் சமீப காலத்தில் அதிகம் விவாதத்துக்கு உள்ளாகி வந்துள்ளன. இவை பற்றிப் பூரண உடன்பாடு இல்லாத போதும், மலையகத் தமிழரின் தனித்துவம் பற்றிய பரவலான உடன்பாடு உள்ளதெனலாம். இக் கேள்விகள் ஏற்படுத்தும் கருத்து வேறுபாடுகள் பலவற்றுக்கு தேசமும் தேசிய இனமும், சுயநிர்ணயமும் பிரிந்து போகும் உரிமையும் என்பன தொடர்பான மாறுபட்ட அபிப்பிராயங்கள் காரணமாக இருக்கலாம். இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக ஒவ்வொருவரும் கருதும் தீர்வுகள் மலையகத் தமிழரதும், முஸ்லீம்களதும் தேசிய இனத் தகுதி பற்றிய முடிவுகளைப் பாதிக்கின்றன.

> மலையக மக்கள் மத்தியில் தொண்டமானுடைய தலைமைக்கு ஈடுகொடுத்து அரசியல் நடத்தும் ஆற்றல் தமிழ் இடதுசாரிகட்கு இருந்தளவுக்குத் தமிழ்த் தேசிய வாதிகளுக்கு இருக்கவில்லை

## மலையகத் தமிழரின் தனித்துவம்

மலையகத் தமிழர் என்ற சொற்றொடரின் அடிப்படையில் மட்டுமே, மலையகத் தமிழர் என்ற இனப் பிரிவை வரையறுக்க வேண்டும் என்ற வாதம் இன்று எழுந்துள்ளது. மலையகத் தமிழரது சுயநிர்ணய உரிமை பிரிவினைப் போக்குகளை ஊக்குவிக்கும் என்ற அச்சம் சிலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களை தனியொரு தேசிய இனமாக அங்கீகரிப்பது தமிழ் பேசும் மக்களின் உரிமைக்கும் விடுதலைக்குமான போராட்டங்களைப் பலவீனப்படுத்தும் என்ற கருத்தும் கூறப்பட்டுள்ளது. வரலாற்றுக் காரணங்களால் மலையகத் தமிழர் இலங்கையின் வடக்குக் கிழக்கின் தமிழர்களினின்றும் வேறுபட்ட அரசியல் சமுதாய விருத்திகளையே அனுபவித்தனர். வடக்கின் சாதி அமைப்பின் வலிமையும், மேற்சாதி சுரண்டும் வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கமும் மலையகத் தமிழரையும் வடக்குக் கிழக்கின் தமிழரையும் ஒருமைப்படுத்துவதற்குத் தடையாகவே நின்றன. அதைவிட, மலையகத் தமிழர் வடக்குக்கிழக்குடன் தொடர்ச்சியற்ற மலைநாட்டில் வாழ்ந்தமையும் அவர்களது தனித்துவத்தை மேலும் வலியுறுத்தியது.

மலையகத் தமிழரின் தனித்துவத்தை மார்க்சியவாதிகள் வலியுறுத்துவது என்பது அவர்களை வடக்குக் கிழக்குத் தமிழரிடமிருந்து பிரிக்கும் முயற்சி அல்ல. மாறாக உண்மையான ஒரு நிலைமையை அடையாளம் கண்டு அதை அங்கீகரிப்பதன் மூலம் பின்தங்கிய நிலையிலுள்ள ஒரு சமுதாயப் பிரிவின் நலன்களுக்கான போராட்டத்தை முன்னெடுக்கும் முயற்சியே அது. எல்லாவற்றிலும் முக்கியமாக, வடக்குக் கிழக்கில் வாழும் தமிழரின் உரிமைப் போராட்டம், பெயரளவில் மலையகத் தமிழரையும் முஸ்லீம்களையும் உள்ளடக்கிய போதும், நடைமுறையில் வடக்குக் கிழக்கைச் சார்ந்த தமிழரது நலன்களையொட்டியே தன் பாதையை அமைத்துக் கொண்டது. பழைய தமிழ்க் காங்கிரஸ் தலைமையின் கீழ் மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம் அத் தலைமையின் வர்க்க நலன்களை ஆதாரமாகக் கொண்டது. தமிழ் பேசும் மக்கள் என்ற பெயரில் அரசியலைத் தொடங்கிய தமிழரசுக் கட்சியும் காலப் போக்கில் வடக்குக் கிழக்கின் வசதி படைத்த உயர்சாதித் தமிழரின் பிரதிநிதியாகி விட்டது. மலையக மக்கள் மத்தியில் தொண்டமானுடைய தலைமைக்கு ஈடுகொடுத்து அரசியல் நடத்தும் ஆற்றல் தமிழ் இடதுசாரிகட்கு இருந்தளவுக்குத் தமிழ்த் தேசியவாதிகளுக்கு இருக்கவில்லை.

## 'தமிழ் பேசும் மக்கள்' என்ற கோட்பாட்டின் தோல்வி

மலையகத் தமிழரின் நலன்களையும் வடக்குக் கிழக்குத் தமிழரது நலன்களையும் ஒருங்கிணைத்துப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்களை எழுபதுகளின் முற்பகுதியில் மலையகத் தமிழருக்கு எதிராக எடுக்கப்பட்ட சிங்களப் பேரினவாத நடவடிக்கைகள் அளித்தன. ஆயினும் வடக்கில் மேலோங்கியிருந்த தமிழ் உயர் நடுத்தர வகுப்பு மனோபாவம் ஒடுக்கப்பட்ட மலையக மக்களுக்கு வடக்குக் கிழக்கிலுள்ள தமிழர் மீதான நம்பிக்கையைப் பலவீனப்படுத்தியது. 1970களிற் காந்தியம் போன்ற நிறுவனங்களினால் முன்னெடுக்கப்பட்ட நற்பணிகள் சிறுபான்மைப் போக்காகவே இருந்தன. இந்த நிலையில் சகல தமிழ் பேசும் மக்களது நலன்களுக்காகவும் போராடக் கூடிய ஒரு தமிழ்த் தேசியவாதத் தலைமை முற்றிலும் அசாத்தியமாகி விட்டது. பழைய தமிழ்த் தேசியவாதிகளது குறுகிய பார்வையையே அவர்களது போராளி வாரிசுகளும் சுவீகரித்துக் கொண்டனர். எனவே, தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் ஒரு குரலாகப் பேச வேண்டும் என்ற தமிழ்த் தேசிய முதலாளித்துவக் கருத்து நடைமுறைக்கு இசையாத ஒன்றாகிவிட்டது.

இதன் அர்த்தம், தமிழ் பேசும் மூன்று முக்கிய இனப் பிரிவுகளும் பிளவுபட்டு நிற்க வேண்டுமென்பதல்ல. ஒவ்வொரு பிரிவிற்கும் உரிய தனித்துவம் தமிழ் பேசும் இனம் என்ற பகுப்பின் மூலம் மறைக்க முடியாதது என்பதால், அவ் வேறுபாடுகள் பகைமையான உறவுக்குப் காரணமாகிவிடா. சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கட்கு எதிரான போராட்டத்தில் சகல சிறுபான்மை இனங்களும் இணைய வேண்டிய தேவையா' லும் பொதுமொழியாலும் வரலாற்று ரீதியான உறவுகளாலும் அவர்களிடையே நெருக்கமும் நல்லுறவும் மிகவும் சாத்தியமாகிறது டன் இன்றைய சூழலில்· மிகவும் அவசியமாகிறது.

> தமிழ்த் தேசியவாதிகளது குறுகிய பார்வையையே போராளி வாரிசுகளும் சுவீகரித்துக் கொண்டதால் மலையக மக்களையும் உள்ளடக்கிய தமிழ் பேசும் மக்கள் என்ற கோட்பாடு நடைமுறையில் தோல்வி கண்டது

## வடக்கு கிழக்கிகான தீர்வு மலையகத்திற்கான தீர்வாகாது

வடக்கு கிழக்கில் உள்ள தமிழரது தேசியப்பிரச்சினையின் தீர்வு, பிரதேச அடிப்படையிலான சுயாட்சியையோ அல்லது சூழ்நிலைகளின் நிர்ப்பந்தத்தாற் தனி அரசையோ கூட அவசியமாக்கக் கூடும். எவரேனும் அத்தகைய தீர்வு, மலையகத் தமிழரது நலன்களையும் முற்றாக உள்ளடக்குமென்று கூறின் அது சுத்தமான பித்தலாட்டமே. இந்தளவில், மலையகத் தமிழரது நலன்களைப் பேண அவர்கள் இன்று வாழும் பிரதேசங்களையும் அவர்களது தொழில்வசதிகள் வாழ்க்கை முறை என்பனவற்றையும் கணிப்பிற் கொண்டேயாக வேண்டும். எனவே தான் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒரே தேசிய இனமென வலியுறுத்துவோர், மலையகத் தமிழர் தமது சுயநிர்ணய உரிமையை 'தமிழ் பேசும் இனம்' என்ற அடிப்படையிற் பேணுவதற்கு வடக்குகிழக்கிலுள்ள பாரம்பரியப் பிரதேசங்களின் சுயாட்சியோ, பிரிவினையோ போதாது என்பதை உணரவேண்டும். மலையக மக்களின் இருப்பும் நலன்களும் உறுதிப்படுத்தப்பட அவர்களது தனித்துவம் தெளிவாக அடையாளங் காணப்படுவதும் அங்கீகரிக்கப்படுவதும் அவசியம்.

— சிவம் —

## 'மலையகத் தமிழர்' என்ற பதம் எவ்வாறு உருவானது

மலையகத் தமிழர் என்ற சொற்றொடர் எவ்வாறு வழக்கத்துக்கு வந்தது என்பதை நாம் மறந்து விடுவதால் மலையகத்தில் வாழ்வோரை மட்டுமே அது குறிக்கிறது என்று எண்ண நேர்கிறது. பிரித்தானியர் ஆட்சியின் போது இந்தியாவிலிருந்து வந்த மக்கள் அனைவரையும் இந்தியர் என்று அடையாளங் காட்டும் வழமை இருந்தது. இந்தியத் தமிழர், இந்தியச் சோனகர் போன்ற சொற்றொடர்களால் மலையகத்திலும் பிற பகுதிகளிலும் கூலி உழைப்புக்காக இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட மக்களும் அவர்களது வரவையொட்டி இங்கு வந்த பிறரும் அழைக்கப்பட்டனர். 'இந்தியா' என்ற அடைமொழி அவர்களை அந்நியராகவே அடையாளங்காட்டியமையால் அவர்களுக்கு இலங்கை மண்ணில் உள்ள உரிமையை வலியுறுத்தும் நோக்கிலேயே அவர்களை மலையகத் தமிழர் என அழைக்கும் வழச் கம் உண்டாயிற்று.

தென்னிந்தியாவிலிருந்து பிரித்தானியர் ஆட்சியின் போது கொண்டு வரப்பட்ட தமிழரிற் குறிப்பிடத்தக்க தொகையினர் கொழும்பிற் கூலி உழைப்பாளராக வாழ்ந்தனர். தென்னிந்தியாவிலிருந்து தமிழ் பேசும் வணிகர்கள் வந்தார்கள். இவர்களை விட, மலையாளிகளும், பிறப்பாற் தெலுங்கர்களான அருந்ததியர் குலத்தவரும் வந்தார்கள். மலையாளிகள் பல்வேறு தொழிற்துறைகளிலும் தொழிற்சங்க அரசியலிலும் முக்கிய பங்கு வகித்தனர். அருந்ததியர் பெரும்பாலும் நகரசுத்தித் தொழிலிலும் குறைந்த வருமானம் தரும் கூலி உழைப்பிலும் அமர்த்தப்பட்டனர்

# வந்திட்டு வந்திட்டுப் போறியோ மச்சாள்

## அரங்காடிகளின் இரு நாடகங்கள்- ஒரு சிறு குறிப்பு

சுதன்

ரசிகர் அவைக்காக அரங்காடிகள் வழங்கிய ''முயலார் முயல்கிறார்'' ''பொறுத்தது போதும்'' ஆகிய இரு நாடகங்கள் கடந்த 18.9.93 சனி மாலை தெகிவளை ஜயசிங்க மண்டபத்தில் மேடையேறின. தமது முன்னைய அரங்கு நிகழ்வுகளில் கவனித்திருந்த நேரத்தினை இம் மேடையேற்றத்தில் அரங்காடிகள் தவறவிட்டிருந்தனர். 6.00 மணிக்கென அறிவிக்கப்பட்ட போதிலும் ஏறக்குறைய 30 நிமிடங்கள் நிகழ்ச்சி தாமதப்பட்டது. நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் அறிமுகம் செய்தவர் இக் கால தாமதத்திற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்ட போதிலும் பதினைந்து நிமிடங்களுக்கும் மேலாக தொடர்ந்த அவரின் 'அறிமுகம்' பார்வையாளர்கள் பலரை 'அறுவை' என முணுமுணுக்க வைத்திருந்தது.

முதலில் மேடையேறிய 'முயலார் முயல்கிறார்' பாடசாலை நாடகம் எனக் கூறுவதற்கு மிகப் பொருத்தமானது. எல்லோரும் சிறுவயதில் படித்த 'சிங்கமும் முயலும்' கதை நாடகமாகப் பின்னப்பட்டுள்ளது. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் பிரதியினை வளர்ந்தவர்களையும் சிறுவர்களையும் இணைத்து நெறிப்படுத்தியுள்ளார் அ.ரவி. நெறியாளர் உட்பட பல அனுபவ நடிகர்களும் புதிய மிக இளைய (5வயது) நடிகர்களும் இணைந்து நடித்தமை என்பதனை விட, இக் குழந்தைகள் வளர்ந்தவர்களுடன் ஈடு கொடுத்துச் சென்றமை மெச்சத்தக்கதாக இருந்தது. நாடகத்தில் சிங்கத்தின்

றலும் (அனுபவமும்) வேறுபடுத்தி நிற்க முயன்றாலும் ஏனைய நடிகர்களின் திறனை அல்லது வெளிப்பாட்டினை அது பின்தள்ளி விட்டது எனக் கூறுவதற்கில்லை. நாடகத்தின் பின்னணியில் ஒலித்த இசை கேட்கக் கூடியதாக இருந்தாலும் அதில் அதிகளவு கவனம் செலுத்தப்படவில்லை' என்பது தெரிகிறது.

நாடகம் ஆரம்பித்த சில நிமிடங்களுக்குள்ளேயே 'பழைய கதை' எனத் தெரிந்து கொண்டு, மேடையில் பாத்திர அசைவுகளையும் நடிப்பினையும் கவனித்துக் கொண்டிருந்த பார்வையாளர்களுக்கு ''கிணற்றுக்குள்ளை என்ர நிழலைக் காட்டி ஏமாற்றவா பார்க்கிறாய், அப்படி ஏமாந்தது என்ர அப்பன்ர அப்பன்'' என சிங்கம் சொல்லுவது ஒரு திருப்பத்தினை உணர வைக்கிறது. பழைய- எல்லோருக்கும் தெரிந்த கதையினை சிறுவர் நாடகமாகப் பிரதியமைத்த குழந்தை ம.சண்முகலிங்கம் இந்த இடத்தில் தான் தனது முத்திரையினைப் பதிக்கிறார். பார்வையாளர்களை நாடகத்துடன் ஒன்றியிருக்கவும் இது உதவுகிறது.

முதலாவது நாடகத்தில் நடித்தவர்கள் குறிப்பாகச் சிறுவர்கள், காட்

அமைப்பு, ஒளி என்பன குறிப்பிடும்படியாக இருந்தன. நாடகம் முழுவதிலும் அசைவுகளை மறக்காமலே பின்பற்றிய பன்றிக் குட்டியைக் குறிப்பிடாது விட முடியாது. இதனால் ஏனைய பாத்திரங்கள் 'சோடை போய் விட்டன' என்பது பொருளாகாது.

இரண்டாவது நாடகம் அ. தாசீசியஸின் ''பொறுத்தது போதும்'' மொறட்டுவ பல்கலைக் கழக மாணவர்களைக் கொண்டு இதனையும் அ.ரவியே நெறிப்படுத்தியிருக்கிறார். மீனவ சமூகத்தின் இன்னல்களையும் சம்மாட்டியின் கொடுமைகளையும் தாசீசியஸ் நாடகத்தின் கருவாக்கியுள்ளார். கரைவலை இழுக்கும் காட்சியோடே நாடகம் தொடங்கி முடிவது மீனவ சமூகத்தினைப் பார்வையாளர்களிடையே காட்டுவதற்கு ஓர் உத்தியாக அமைந்துள்ளது.

நாடகம் கதையமைப்புக்கு ஏற்ற வேகத்தினை மேடையில் கொண்டிருக்கவில்லை. பல இடங்களில் இசை பாத்திரங்களின் உரையோடு போட்டி போட்டமையை அவதானிக்க முடிந்தது. சம்மாட்டியின் போக்கினால் (நடவடிக்கைகளினால்) துன்பப்படும் மீனவ சமூகப் பிரதிநிதியாக வரும் இளைஞன்


ஏற்படும் உணர்வு போதுமான வகையில் வெளிப்படுத்தப்படவில்லை என்றே கருத வேண்டியுள்ளது. சம்மாட்டி மீனவர்களை ஆட்டிப் படைப்பது நன்கு காட்டப்பட்டாலும் மேடை முழுவதனையும் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் இவை நாடகத்தினை தூக்கி எறிந்து விட்டன என வலிந்து கூறி விட முடியாது. இன்றைய சூழலில் ஒத்திகைகளை மேற்கொள்ளல், நகர வாழ்க்கையோடே மாணவர்களும் உத்தியோகத்தர்களும் நேரத்தினை ஒதுக்கி இவ்வாறான நிகழ்வுகளில் ஈடுபடல் என்பவற்றினை மறந்து நாடகங்கள் பற்றிய குறிப்புகளை எழுத முடியாது.

''வந்திட்டு வந்திட்டுப் போறியோ மச்சாள் ...'' இன்னமும் காதுகளில் ஒலிக்கிறது.

பொதுவாக அரங்காடிகளின் நாடகங்கள் இரண்டும் அவர்களது 'தரமான' தமிழ் நாடகங்களை மேடையேற்றும் குறிக்கோளின் நல்ல ஆக்கங்கள் என்றே சொல்ல வேண்டும். பிரதி- மேடை அமைப்பு- வெளிப்படும் நடிப்பு என்பவற்றோடு இசை, ஒளி போன்றவற்றினையும் அரங்காடிகள் கவனிப்பதுடன் யாழ்ப்பாணப் - பிரதேசத்தினைக் களமாகக் கொண்ட நாடகங்களை மட்டுமல்லாது; இலங்கையின் ஏனைய பிரதேசக் கள அமைவு கொண்ட நாடகங்களையும் எதிர் காலத்தில் மேடையேற்றுவார்கள் என எதிர்பார்ப்போம்.

நன்றி - நூலகத்திட்டம்






## இந்தியா செய்தது தியாகமா?

சுமார் இரு மாதங்களுக்கு முதல் பிரசுரிக்கப்பட்ட சரிநிகர் இதழொன்றின் கட்டுரை ஒன்றிலே இந்திய ஏகாதிபத்தியவாதம் பற்றி உங்கள் கருத்தையும், அதன் பிறகு வந்த இதழில் ''தெஹிவளை மாலன்'' என்பவரின் விமர்சன மடலையும் வாசித்தேன். அதன் விளைவாக இதை எழுதுகிறேன்.

இன்று தலைநகரில் வெளிவரும் பத்திரிகைகளில் தமிழர் நலன்பற்றி கவனம் செலுத்தும் பத்திரிகை என்றரீதியில் சரிநிகரில் தமிழர் சார்பு காணப்படுவது இயல்பானது. அதுவே தேவையானதும் கூட. ஆனால் தமிழர் சார்பு என்றாலே அது புலிசார்பு என்றும், தமிழர்களே புலிகள், புலிகளே தமிழர்கள் என்றும் அப்பட்டமாக பச்சை இனவாதம் கக்கும் சிங்களப் பேரினவாதிகள் போல சரிநிகரை ''பிரபாகரனின் வால்'' என்னுமாப்போல் எழுதியிருப்பது விசனத்தை தருகிறது. மாலன் எதைக் கொண்டு சரிநிகர் ''பிரபாகரனை வளர்க்கிறது'' என்று கூறுகின்றார்? சரிநிகர் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, பச்சைப் பேரினவாதத்தால் உரிமையிழந்து ஊசலாடும் தமிழ் பேசும் மக்களுக்குச் சார்பாக கட்டுரை வரைகிறது என்பதாலா?

இந்திய பேரினவாதத்தை அம்பலப்படுத்தும் போது சரிநிகர் ஆசிரியரை மூடன் என்றும் பிரபாகரனை முட்டாள் என்றும் கூறும் மாலனின் புத்திசாலித்தனமான கருத்துத்தான் என்ன? தமிழருக்காக இந்தியா தியாகங்கள் செய்தது என்று கூத்தாடும் மாலன் போன்றோர் ஒரு தியாகச் செயலைத்தானும் கூறமுடியுமா? இந்தியா, இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டதன் உள்நோக்கம் இவருக்கு விளங்காவிட்டாலும் 'தமிழருக்கு' நன்கு விளங்கியே இருக்கிறது. மூன்று வருடகால திட்டமிட்ட ஆக்கிரமிப்பினால் சுமார் பத்தாயிரம் அப்பாவித் தமிழரை ஈவிஇரக்கமின்றி கொன்று குவித்த சாத்தானின் படைகள் செய்ததுதான் தியாகமா? தனது நாட்டில் ஒரு பகுதியான ஜம்மு காஷ்மீரிலும், பஞ்சாப்பிலும் உரிமை கேட்டு ஓலமிடும் மக்களை அதுவும் தன் சொந்த மக்களையே மிருகத்தனமாக கொன்றொழிக்கும் இந்திய மத்திய அரசு வேற்று நாட்டு மக்களுக்கு குறிப்பாக இலங்கைத் தமிழருக்கு தியாகங்களை புரிந்தது என்றும், இனியும் உதவிபுரியும் என்று இலவுகாக்கிறாரா மாலன்.

அல்லது இலங்கையில் இந்திய ஆக்கிரமிப்பைப் போலவே வியட்நாமில் அமெரிக்க ஆக்கிரமிப்பு, ஆப்கானிஸ்தானில் ரஷ்ய ஆக்கிரமிப்பு, பங்களாதேஷில் உதவி என்ற ரீதியில் இந்திய அடாவடித்தனம் என்பவற்றை எல்லாம், அந்நாட்டு குடிமக்களுக்கு இந்த அரசுகள் செய்த தியாகம் என்று கருதுகிறாரா மாலன்?

இந்திய அரசின் செயல்கள் பற்றி திருப்திப்படும் மாலன், இந்தியாவை புகழ்வதன் மூலமோ, இந்திய எதிர்ப்பை எதிர்ப்பதன் மூலமோ பாதிக்கப்பட்ட தமிழர்களின் வெறுப்பைச் சம்பாதிக்க விரும்புகிறாரா?

ஜனநாயக விரோதப் போக்கில் தீவிரம் காட்டினாலும் கூட அப்பட்டமான, திட்டமிட்ட இனப்படுகொலையை நடாத்தும் சிங்கள பௌத்த பேரினவாத அரசுக்கு எதிராகப் போராடுகிறார்கள் என்ற ரீதியில் புலிகளின் போக்கு சரியானதே. (இப்படி எழுதுவதால் புலிகளின் எல்லா நடவடிக்கைகளும் நியாயப் படுத்தப்படுகின்றன என்று எவரும் கருத வேண்டாம்) தனிப்பட்ட கொள்கைகள், கருத்துக்களின் அடிப்படையில் மாலன் போன்றோரின் புலி எதிர்ப்புக் கொள்கை தமிழர் எதிர்ப்பாக மாறுவது சரியான து தானா?. ''ஜனநாயக விரோதப் புலிகள்'' என்று கூக்கிரலிடும் மக்கள் குரலார் போன்று கூக்குரலிடும் மாலன் கருதுவது தான் என்ன?

**தேவராசா தேவராஜ்**
**கொழும்பு - 5**
**(இதே கருத்துப்பட சி.சரண்யன் என்பவரும் மூளாயிலிருந்து எழுதியிருக்கிறார்)**

## சுதந்திர இலக்கிய விழா ஏன்?



**சுதந்திர இலக்கிய விழாவின் அமைப்புக் குழுத் தலைவர் திரு ஜயத்திலக கமலவீர அவர்களுடன் நடத்திய கலந்துரையாடலில் ஒரு பகுதி:**

**கேள்வி: இத்தகைய இலக்கிய விழாவை ஆண்டு தோறும் ஒழுங்குபடுத்துவது மூலம் தாங்கள் எதிர்பார்ப்பது என்ன?**

பதில்: எமது இலக்கிய படைப்புக்களை அவதானிக்கும் போது, உலகின் அனேக நாடுகளின் சிருஷ்டிகளின் உயர் மட்டத்தை அவை எட்டவில்லை என்ற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்திய இலக்கியப் படைப்புக்களின் சிருஷ்டிகளை அண்மிக்கக்கூடிய படைப்புக்கள் இலங்கையிலிருந்து ஒரு சில மாத்திரமே வெளிவந்துள்ளன. காத்திரமான திறனாய்வு செய்யப்படாமையே இதற்கான காரணியாகும். எமது இலக்கியப் படைப்புக்களை அர்த்தமுள்ள வகையில் திறனாய்வு செய்வது சுதந்திர இலக்கிய விழாவின் முக்கிய குறிக்கோளாகும். இலங்கையின் இருமொழிகளான சிங்களத்தையும் தமிழையும் ஏக காலத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அமையும் தேசிய மட்டத்திலான ஒரு இலக்கிய விழாவாக இதனை ஒழுங்கு செய்வதின் முக்கியத்துவத்தையும் இங்கு வலியுறுத்துகின்றோம்.


மற்றுமோர் விடயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். இலக்கியவாதிகள், விமர்சகர்கள்,வாசகர்கள் ஆகிய அனைவரும் சுதந்திரமாகச் செயற்பட்டு இந்த இலக்கிய விழாவை நடத்துவதன் மூலம்,இலக்கியத்துறையில் ஒரு ஜனநாயகச் செயற்பாடு வெளிப்படுத்தப்படுகின்றது. சிறந்ததொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு பௌதீக வளங்களை மாத்திரம் அபிவிருத்தி செய்வது போதாது. அதற்கு ஆத்மீக வளங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். அதே நேரத்தில் விமர்சனத்தை ஏற்றுக் கொள்ளுதல், எதிர்க்கருத்துக்களை செவிமடுத்தல்,தாம் சார்ந்த துறைகளைப் பொறுத்த வரை கூட்டாகச் செயற்பட்டு தமது பங்களிப்பைச் செலுத்துதல், போன்ற ஜனநாயக சமூகத்திற்கு தேவையான அத்தியாவசியக் குணவியல்புகளை கலாசாரத் துறையிலும் நடைமுறைப்படுத்தல் என்பன சுதந்திர இலக்கிய விழாவை ஒழுங்குபடுத்தும் போது கவனத்தில் எடுக்கப்பட்டன.

## கைகுலுக்குவது......

தமிழ் மக்கள் இன்று நடாத்தும் போராட்டம் வெறும் பயங்கரவாத வெறியாலல்ல; அவர்களது உரிமைகள் தொடர்ந்து நசுக்கப்பட்டு வந்ததாலேயே என்று புரிந்து கொள்ளும் படியே; பாலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் பாலஸ்தீனத்தையும் சமமாக அங்கீகரித்த பின்னரே 'சியோனிச இஸ்ரேல்' கைகுலுக்கிக் கொண்டது என்பதை யூ.என்.பியினர் புரிந்து கொள்ள வேண்டும்; தமிழ் மக்களின் பிரச்சினை ஒரு தேசத்தின் உயிர்ப் பிரச்சினை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்; பரஸ்பர அங்கீகாரம்- தமிழ் தேசிய இனம் ஒரு தனியான, சிங்கள இனத்துக்கு எவ்வகையிலும் கீழ்ப்படாத தேசிய இனம் என்ற அங்கீகாரம்- உருவாக்கப்பட வேண்டும்; அது தான் சமாதானத்திற்கான முக்கியமான அடிப்படை ஆகும் என்பதையே!

ஆனால் சட்டத்தரணி அவர்களுக்கு இவை எல்லாம் முக்கியமானவையாகப் படுகின்றனவோ என்னவோ?

வெறும் ஆசைகளுக்கு வீரகேசரியில் வேண்டுமானால் முன்பக்க இடம் கிடைக்கலாம். ஆனால் வரலாற்றில் அவற்றின் இடம் குப்பைத் தொட்டியைத் தவிர வேறொன்றுமில்லை!



சூரியன் மறைந்த பிறகு
காலமெல்லாம்
என்வீட்டு முன்றலிலே
பச்சையாய்க் குடை விரித்துக்
குளிர்வித்த புளியமரம்
கரும் பூதமாகி நெஞ்சில் பயம் கிளப்பும்;

கண்ணீரில் கரைகையிலே
காலால் உதைத்து
வேடிக்கை பார்க்கும்.

விழி நிமிர்த்தி
அண்ணாந்து பார்க்கையிலே
நிலவாலே தோள் தடவி
மனம் ஆற்றும் நீள்வானும்
இருண்டு கிடக்கும்.

வீழ்ந்து
புரண்டு அழுத போதெல்லாம்
தன்மடியில் இட்டு
எனை அணைத்த மண்கூட
வழிதேடும் எனக்கு
புதைகுழியைக் காட்டும்

சிறையுண்ட ஆத்மாவை
சுமந்திருக்கும் உடலோடு
ஆதரவு தேடி
ஒற்றைப் பறவையாய்
என் பயணம் தொடங்கிற்று.

என் வாசல் தாண்டுகையில்
நா வரண்டு...
பேச்சிழந்து
வழிநெடுக விழி நீள
என்தாய் வழி அனுப்பத்
தலை குனிந்தேன்.
காற்றுக்கும் காதிருக்கும்
கத்தி அழ முடியாது.
சோகம் தான்

விடுதலைப் பாதையில்
நடக்க முனைந்ததால்
முடமாக்கப்பட்டு
ஒரு கள்வனைப் போல
அடிமேல் அடியெடுத்து
மெல்ல நடந்தேன்.

எனது கிராமத்து வயல்வெளியும்
வயல்வெளிக்கு துணையாக
உடன் துயிலும் இருளுக்கு

நீண்டிருந்த பனைகளும்
கடும் கோபம் கொண்டு
எனை வெறித்துப் பார்த்தபடி.

வெற்றுத் தாளாய்
காற்றோடு பறந்தது
இதயம்
இருளோடு கரைந்தது
முகம்
இன்றும் என் கால் மட்டும்
என்னோடு கூட,

மணற் காட்டு வெளியும்
புதுக்காட்டுச் சந்தியும்
தாண்டிக்குளமும் தாண்டி
நீள நடந்தேன்
குனிந்ததலை நிமிரவில்லை.

எனது மண்ணில் நிச்சயமற்று போய்விட்ட
எனது இருப்பை
உறுதிப்படுத்த
பிறந்த மண்ணின் எல்லையைக் கடந்தேன்
இறுதியாக
பாதங்களில் ஒட்டியிருந்த செம்மண்ணையும்
தட்டியாயிற்று.
செம்மண்ணும் போயிற்று
எம்மண்ணும் போயிற்றுப்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சரிநிகர்



## சுதந்திர இலக்கிய விழா - 1993

### ஜோன் டீ சில்வா நினைவரங்கு

### ஒக்ரோபர் 8 - 9

நிகழ்ச்சி நிரல்

**1993 ஒக்ரோபர் 8 வெள்ளிக்கிழமை**

காலை 9 மணிக்கு விழா ஆரம்பமாகும்

9-15 - 11-30 வரை

**சர்வதேச சிருஷ்டி இலக்கியத்தின் ஏகபோக ஒருங்கமைப்பு பற்றிய கலந்துரையாடல்**

உரையாற்றுவோர்:

கலாநிதி பியசிறி விஜயசேகர

ரஞ்சித் பெரேரா

கலாநிதி சுனில் விஜயசிறிவர்தன

கபில குமார காலிங்க

மு.ப.11-30 - 1.00 மணி வரை

**''இலக்கியமும் இன உறவும்''**

**சிங்கள,தமிழ் இலக்கிய பரிவர்தனை பற்றிய கலந்துரையாடல்**

உரையாற்றுபவர் கலாநிதி எம்.ஏ.நுஃமான்

பிற்பகல் 2.00-5.30

**சிங்கள, தமிழ் இளம் எழுத்தாளர்களின் படைப்புக்கள் பற்றிய மதிப்பீட்டு உரைகள்**

தமிழில் உரையாற்றுவோர்:

எஸ். ரஞ்சகுமார்

எஸ்.தேவராஜா

சிங்களத்தில் உரையாற்றுவோர்:

சுகத்தபால டீசில்வா

ஆரிய வம்ச ரணவீர

லூசன் புனத் சிங்கள

மாலை 5.30 - 6.30

இளம் எழுத்தாளர்களுக்கான போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசு வழங்கல்

6.00:கலாசார நிகழ்ச்சிகள்

நந்தா மாலினி - ரவிபந்து வித்தியாபதி

மாலினி கிருபாகரன் - ஹர்ஷ மாக்கலந்த

பிரசன்ன அபேசேகர - காலோ விஜயசிறி

நிசங்க தித்தெனிய - கௌசல்யா பெர்ணந்து

நவரத்தின கமகே உட்பட பிரபல கலைஞர்கள் பங்கு பற்றுவர்

**ஒக்ரோபர் 9 ஆம் திகதி**

**காலை 9.00-12.30 வரை**

**1991,1992 இல் வெளியாகிய தமிழ் இலக்கிய படைப்புக்கள் பற்றிய மதிப்பீட்டு உரைகள்**

உரையாற்றுவோர்:

சிறுகதை - பெனடிக்ற் பாலன்

நாவல் - சித்திரலேகா மௌனகுரு

கவிதை - செ.யோகராஜா

பிற்பகல் 1.00-5.00 மணிவரை

**1992 இல் வெளியாகிய சிங்கள இலக்கிய படைப்புக்கள் பற்றிய மதிப்பீட்டு உரைகள்**

உரையாற்றுவோர்:

மொழிபெயர்ப்பு - கலாநிதி அர்ச்சுண பராக்கிரம

கவிதை - கலாநிதி சுனில் விஜயசிறிவர்தன

சிறுகதை - திரு திலக் ஜெயரத்தின

நாவல் - பேராசிரியர் சுச்சரித்த கம்லத்

மாலை 5.00 - 6.00 வரை விருது வழங்கும் வைபவம்

6.00 மணிக்கு இசை அமைப்பாளர் பிறேமசிறி ஹேமதாச அவர்களின் இசை நிகழ்ச்சி

---

### வவுனியா விவசாயக் கல்லூரி:

## வடகிழக்கு மாகாண சபையிடமிருந்து பறிக்கப்படுகிறது?

வவுனியா விவசாயக் கல்லூரியை நேரடியாகவே விவசாயத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் மாவட்ட விவசாயக் கல்லூரியாக மாற்றுவதென்றும், கிராமப்புற இளைஞர்களுக்கு விவசாயத் துறையின் பயிற்சி அளிப்பதற்கான நாடு பூராவும் நிறுவப்பட்டுள்ள 25 விவசாயக் கல்லூரிகளில் ஒன்றாகவே இது இயங்குமென்றும், வவுனியா கல்லூரிக்கான கற்கை நெறிகள் எதிர்வரும் 1994 மார்ச் மாதமே ஆரம்பமாகும் என்றும் அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

இந்த நடவடிக்கையானது, வவுனியா விவசாயக் கல்லூரிகளை தரமிறக்கவும், வட-கிழக்கு மாகாண சபையின் கீழ் நேரடியாக இயங்கி வந்த இக் கல்லூரியை மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும், தமிழ் மொழிமூலம் கற்கும் மாணவர்களுக்கு மட்டுமென இருந்த - இந்தக் கல்லூரி இன விகிதாசார அடிப்படையிலேயே, மாணவர் தெரிவை கொண்டிருக்கும் என்று அறிவிப்பதன் மூலம் அவர்களிடமிருந்து பிடுங்கிக் கொள்ளவும் திட்டமிட்டு செய்யப்பட்ட ஒரு நடவடிக்கையே என்று இக் கல்லூரியை சேர்ந்த ஆசிரியர்கள் தெரிவித்தார்கள்.

இந்த விவசாயக் கல்லூரி வடகிழக்கு மாகாணசபையின் செயலாக்க காலப்பகுதியில் 1984ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வவுனியா மாவட்டத்தில் தாண்டிக்குளம் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் உருவாக்கம் முற்று முழுதாகவே தமிழ் மொழி மூலம் கற்கும் மாணவர்களை நோக்கமாகக் கொண்டிருந்தது ஆனால் 1990 யூனில் யுத்தம் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து யூலைமாதம் முதல் இக் கல்லூரி கிளிநொச்சியில் தற்காலிகமாக இயங்கி வந்தது. ஒரே ஒரு பிரிவினர் மட்டுமே தமது கல்வியை முடித்த நிலையில் புதிய ஆண்டிற்கான மாணவர்களை அனுமதிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் அமைதிக்கு திரும்பியுள்ள தாண்டிக்குளம் பகுதியில் யுத்தத்தினால் பாதிப்படைந்த விவசாயக் கல்லூரியை புனர்மைப்பதில் அதிபரும் விரிவுரையாளர்களும் துரிதமாக ஈடுபட்டனர். மிகக் குறுகிய காலத்தில் ஓரளவு புனரமைக்கப்பட்ட கல்லூரி மீண்டும் கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கான திகதியாக கடந்த செப்டம்பர் மாதம் 15ம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் 10ம் திகதியிடப்பட்டு விவசாயத் திணைக்களத்தினால் கல்லூரி அதிபருக்கு அனுப்பப்பட்ட கடிதம், புதிய ஆண்டுக்கான மாணவர்களை தெரிவு செய்வதை உடன் நிறுத்தும்படி பணித்தது.

வட-கிழக்கு மாகாணசபைக்கு சொந்தமான இவ்விவசாயக் கல்லூரியை மந்திரி சபையின் அங்கீகாரத்துடன் பிடுங்கிக் கொள்ளும் நோக்குடனேயே இப்பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இதுசம்பந்தமான விடயங்களை ஆராய்வதற்கு மத்திய அரசினால் உயர்மட்ட குழுவொன்று அனுப்பி வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

அண்மையில் பாராளுமன்றத்தில் விவசாயக் கல்லூரி சம்பந்தமாக தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உறுப்பினர் ராஜா குகனேஸ்வரன் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த விவசாய ஆராய்ச்சி அமைச்சர் தர்மதாச பண்டா இனிமேல் இங்கு ஒரு வருட கற்கை நெறியே நடத்தப்படும் என்றும் அக் கற்கை நெறிக்கான மாணவர்கள் நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும் பரீட்சைகளின் முடிவுகளுக்கு அமைய மாவட்ட அடிப்படையில் அனுமதிக்கப்படுவர் எனக் கூறியுள்ளார். இதற்காக 25 மாவட்டங்களில் 25 கல்லூரிகள் நிறுவப்படும். அங்கு இனவிகிதாசாரத்திற்கு ஏற்பவே மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் எனவும் இவ்வனுமதிக்கான ஆரம்ப தராதரமாக க.பொ.த சாதாரணதரப் பரீட்சையே அமையும் என்றும் அதில் விவசாயத்தை ஒரு பாடமாகக் எடுத்திருக்க வேண்டும் எனவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இதுவரை காலமும் இக்கல்லூரியானது தேசிய மட்டத்தில் தரம் வாய்ந்த கல்லூரியாக இயங்கியது. இங்கு 2 வருடக் கல்வியை பூர்த்தி செய்பவர்களுக்கு குண்டகசாலை டிப்பிளோமாவுக்கு சமதையான டிப்பிளோமா சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதற்கான அடிப்படைத் தகுதியாக க.பொ.த உயர்தரப் பரீட்சையே அமைந்திருந்தது. ஆனால் ஒருதலைப்பட்சமாக அரசினால் இப்போது மேற் கொள்ளப்படவுள்ள இம்முடிவினால் இத் தேசியக் கல்லூரி மாவட்டக் கல்லூரியாகவும் அதன் சான்றிதழ் டிப்பிளோமா சான்றிதழை விட குறைந்த தராதரம் உள்ளதாகவும் அமையும் நிலை உருவாகியுள்ளது. இனவிகிதாசாரம் பின்பற்றப்படுவதனால் வட-கிழக்கு மாணவர்கள் இக்கல்லூரிக்கு தெரிவாகும் வீதம் குறைக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த நாட்டில் தமிழ் பேசும் மாணவர்களுக்கென இருந்த ஒரேயொரு உயர்தர விவசாயக் கல்லூரியும் இல்லையென்றாகி விட்டது.

மேலும் ஏற்கனவே குறிப்பிட்டதற்கு அமைய 1ம் வருட பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்கள் இரண்டாம் வருட பயிற்சியை குண்டகசாலையில் பூர்த்தி ஆக்கினாலே டிப்பிளோமா சான்றிதழை பெற்றுக் கொள்ள முடியும்.

குண்டகசாலை விவசாயப் பயிற்சிக் கல்லூரி ஈரவலயத்திலேயே அமைந்துள்ளது. அங்கு மலைநாட்டு பயிர்வகைகளைப்பற்றி மட்டுமே செய்முறைப் பயிற்சி வழங்கப்படுவது சாத்தியம். ஆனால் உலர் பிரதேசமான வட-கிழக்குப் பகுதி மாணவர்களுக்கு இப்பயிற்சி நெறி உபயோகமற்றதாகவே இருக்கும் என்று வவுனியா விவசாயக் கல்லூரியின் போதனாசிரியர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றார்கள்.

தமது அனுமதி இன்றி இக்கல்லூரி தொடக்கப்பட்டதென இப்போது அரசு தெரிவிக்கின்ற போதும், மாகாண சபைகளின் அதிகாரப் பரவலாக்கலுக்கு ஏற்ப வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு உட்பட்டே இக்கல்லூரி 1989 இல் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குமைய மாகாண சபைக்கென வழங்கப்பட்ட புனர்நிர்மாண ஒதுக்கீட்டிலிருந்தே இதன் அபிவிருத்திக்கும் புனர்நிர்மாணத்திற்குமான 100 மில்லியன் ரூபா எடுக்கப்பட்டது. அதேவேளை மத்திய அரசானது ஒரு மில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்குவதாக கூறியிருந்தது. (இத் தொகையானது இக்கல்லூரியின் கதிரை மேசைத் தேவைகளுக்குக் கூட போதுமானதல்ல என்பது வேறு விடயம்).

மாவட்ட மட்டத்திற்கு தரம் குறைக்கப்படவுள்ள இக்கல்லூரியின் வழங்கலில் 25% மட்டுமே இங்கு பயன்படுத்தப்படும் என தெரிய வருகிறது. அப்படியானால் எஞ்சிய 75% மான வழங்கல் எந்த மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படவுள்ளன?.

### கரன்.

இக்கல்லூரியில் கல்விகற்ற மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவரதும் நிலை என்ன?.

முழுக்கமுழுக்க மாகாணசபையின் அதிகாரங்களுக்கும், பொது ஒதுக்கீட்டுக்கும் அமைய உருவாக்கப்பட்ட விவசாயக் கல்லூரியை பறித்தெடுத்து விட அரசு முயற்சிப்பது ஏன்?.

வட-கிழக்கு மாகாணசபைக்கு வழங்கப்பட்ட அற்ப சொற்ப அதிகாரங்களையும் பிடுங்கி விடும் அரசின் நோக்கம் தான் இதற்குக் காரணமா?.

சரிநிகர் மாதமிருமுறை இதழ் இல. 18/2 அலோ சாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.